# நக்ஸல்பாரி இயக்கம் தமிழ்நாட்டில் முற்ருக ஒழித்துக் கட்டப்படும்

## முதல்வர் எச்சரிக்கை

Registered as a NewsPaper in Ceylon    விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் 49
போன்: 389

மலர் 12
இதழ்: 39
தேசிய தினசரி

யாழ்ப்பாணம்  பங்குனி 8  முஹர்ரம் 12  சனிக்கிழமை  [21-3-70]

மில்க் வைற்
நீலசோப்
மேலுறைகளைக் கவனித்து
வாங்குங்கள்
போலிகளை வாங்கி
ஏமாருதீர்கள்
மேலுறைகளை சேகரித்து
பரிசுகளைப் பெறுங்கள்

சென்னை, மார்ச் 20

நக்ஸல்பாரி இயக்கத்தினர் தமிழ் நாட்டில் தீவிர நடவடிக்கைகளில் இறங்கினார்கள். அவர்கள்மீது கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் தமிழ்நாடு முதல்வர் திரு மு. கருணுநிதி இன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் கூறினுர்

நக்ஸல்பாரி நடவடிக்கைகள் குறித்து எல்லாக் கட்சிகளும் ஒருமித்து நடவடிக்கை எடுக்க முன் வர வேண்டும் என்று அவர்கேட்டுக்கொண்டார்.

நக்ஸல்பாரி இயக்கம் தடை செய்யப்படாததின் காரணமர்க அவர்கள் இயங்குவதைத் தடுக்க முடியாமலிருப்பதாகவும் ஆனுல் அவர்களின் நடவடிக்கைகளை அரசு மிகவும் கவனமாக அவதானித்து வருமென்றும் அவர் குறிப்பிட்டார்.

நக்ஸல்பாரி இயக்கம் தடை செய்யப்பட வேண்டிய ஒன்று என்பதே தமிழ் நாட்டு அரசின் கருத்து என்று குறிப்பிட்ட திரு கருணுநிதி அவசியமானுல் நக்ஸல்பாரி இயக்கத்தை கட்டுப்படுத்து வதற்கென்றே தனியான ஒரு பொலிஸ்பிரிவு ஏற்படுத்தப்படும் என்றும் குறிப்பிட்டார்.

## கூட்டாட்சியினர் பதவிக்கு வந்தால்

# “சிறுபான்மை மக்களுக்கு முழு பாதுகாப்பு அளிப்போம்”

## கெனமன் உறுதியளிக்கிருர்

கொழும்பு; வெள்ளி

‘இனம், மதம் அல்லது சாதியின் அடிப்படையில் சிறுபான்மையினராயிருக்கும் அனைவருக்கும், கூட்டாட்சியினர் பதவிக்கு வந்தால் முழு பாதுகாப்பளிக்கப்படும்’

இவ்வாறு கம்யூனிஸ்ட் கட்சியின் (மாஸ்கோ சார்பு) பொதுச் செயலாளர் திரு. பீட்டர் கெனமன் கூறினுர்.

சென்ட் அக்குவினுஸ் கல்லூரியில் உரைநிகழ்த்துகையிலேயே திரு. பீட்டர் கெனமன் இந்த உறுதிமொழியைத் தெரிவித்தார்.

சிறுபான்மையினர் உரிமைகளுக்காகப் போராடுவதை கம்யூனிஸ்ட் கட்சி கைவிடவுமில்லை சிறுபான்மை மக்களைக் காட்டிக் கொடுத்துவிடவுமில்லை

என்று திரு. கெனமன்கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் கூறினுர்.

தமிழ்மொழி விசேஷ விதிகள் சட்டத்தை எதிர்ப்பது பற்றியும் அவர் விளக்கம் கூறினுர். இச்சட்டத்தின் கீழ் அரசாங்கம் தமிழ்மொழிக்கு ஆங்கிலத்திற்கு இடம் கொடுக்கின்றது என்ருர் அவ...

### ஜீ.சி.ஈ.முடிவுகள்
## மேமாதம் வெளியாகும்

கொழும்பு, வெள்ளி

மேமாதம் 10ம் திகதி வரையில் ஜீ சீ ஈ. சாதாரணப் பரீட்சையின்முடிவுகள் வெளிவரும் என பரீட்சை...

“ஈழநாடு”
பாலைதீவு நிவாரணநிதி
இந்நிதிக்குப் பணம் அனுப்ப விரும்புபவர்கள் ‘பாலைதீவு விபத்து நிவாரணநிதி’, ‘ஈழநாடு’ யாழ்ப்பாணம்என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க அன்புடன் வேண்டுகிறேம்.
உதவி வழங்கியோர்:
நேற்றுவரை சேர்ந்ததொகை ரூபா 5,506-37
திருநாவுக்கரசு, ஓய்வுபெற்ற ஓவசியர்,
ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம் 5-00
சமுகசேவா சங்கம், மானிப்பாய்
மகளிர் கல்லூரி வண.பிதா மதுரநாயகம்
அவர்கள் மூலம் 141-00

## வேலைக்குசென்ருர்; ஆனல்

# ‘பெண்பழிபொல்லாதது; அனுவசிய கேள்விகேட்க வேண்டாம்’

## ஜீவனும்ச வழக்கில் முதியவர் சாட்சியம்

மட்டுவில், வெள்ளி

‘‘ஐயா, பெண்பழி பொல்லாதது என்னை அனுவசியமாகக் கேள்விகள் கேட்க வேண்டாம் விஷயம் நடந்தது உண்மைதான கூறை கொடுத்து. மாப்பிள்ளைக்கு வேட்டி சால்வை கொடுத்து ஐயருக்கு முன் பிள்ளையார் பூசை பண்ணித் தாலி கட்டப்பட்டது. ஆனுல் பிள்ளையார் பூஜை செய்த ஐயரின் பெயர்தான் எனக்குத் தெரியாது’’

இவ்வாறு சாவகச்சேரி மாஜிதிரேட் திரு கே விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஜீவனும்ச வழக்கொன்றில் மனுதாரின் தந்தையின் ஸ்தானத்திலிருந்து திருமணத்தை நடத்தி வைத்ததாகச் சாட்சியமளித்த 70 வயது முதியவரான பொன்னுத்துரை என்பவர் கூறினுர்.

புத்தூர் வீரவாணியைச் சேர்ந்த இளம் பெண் ஞானேஸ்வரிஎன்பவர் தமது கணவர் தம்மைக் கைவிட்டு விட்டதாக ஆசிரியர் ஒருவர் மீது ஜீவனும்சம்கோரி வழக்கைத் தாக்கல் செய்திருந்தார் இந்த வழக்கை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே விக்னராஜா விசாரித்தார் வழக்கைப் பார்க்க ஏராளமானேர் கோர்ட்டின் உள்ளும் புறமும் கூடியிருந்தனர்.

மனுதாரரான ஞானேஸ்வரி பச்சை மணிப்புரிரேஸ் பொட்டு சேலை அணிந்து முன்ருனையால் போர்த்தபடி நாரதர் கொண்டையுடனும் நவீன நாகரீக கைப்பையுடனும் வந்திருந்தார்...

தார்.

பொன்னுத்துரை தொடர்ந்து தனது சாட்சியத்தில் கூறியதாவது:

மனுதார் எனது தம்பியின் மகள் அவரின் தகப்பன் ஏலாவாளியாக இருப்பதால் மனுதாரின் சகல விஷயங்களையும் நானே கவனிக்க வேண்டியிருந்தது எனவே எதிர் மனுதார்மனுதாரைக் கல்யாணம் செய்ய விரும்பி என்னிடம் அனுமதி கோரினுர் நானும் அதற்கு இசைந்து 68-ம்ஆண்டு ஜூன் மாதம் 28-ம் திகதி இந்த திருமணத்திற்கான முகூர்த்தத்தை வவத்தேன் இந்திருமணம் எமது குலதெய்வமான பிள்ளையார் ஆலயத்தில் காலை 9 மணியளவில் பிள்ளையார்பூ] சைவைத்து, கூறை உடுத்து, தாலிகட்டி தேங்காய் உடைத்து சமயாசாரப்படி நடந்தது’’

இந்த வழக்கில் மனுதார் சார்பில், வழக்கறிஞர் திரு எஸ் கே திரவியநாயகம்ஆஜராகியிருந்தார் எதிர் மனுதார் சார்பில் வழக்கறிஞர்கள் திரு. வி செல்லத்தம்பி திரு கே குணரத்தினம் ஆகியோர் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு ஈ ஆர் தம்பிநாயகம் ஆஜராகியிருந்தார் எதிர்தரப்பு அட்வக்கேட் சாட்சியை குறுக்குவிசாரணைசெய்தார்.

வழ: கல்யாணம் முடிந்து அவர்கள் எத்தனை நாள் குடும்பமாக இருந்தார்கள்? — அவர்கள் நெடுகலும் பெண்சாதி புருஷனுகவே இருந்தனர்.

(கோர்ட்டில் சிரிப்பு)

வழ: நீர் பெண்ணுடன் ...

ஒழுங்குகளை நீர் செய்தீர்?— தேங்காய்க் குடம் கொண்டு வந்து கும்பம் வைத்தேன். 2 குத்துவிளக்கும்கொளுத்தி 3 தேங்காய் உடைத்து பால் பழம் கொடுத்தேன்.

மாஜிஸ்திரேட்: கல்யாணம் முடியுமுன்பே பால் பழம் கொடுத்தீரா?—இல்லை தாலி கட்டி முடிந்தபின் ஐயா.

வழ: யார் பிள்ளையார் பிடித்தது? — ஐயர்.

யார் தேங்காய் உடைத்தது? - நான்.

வழ: யார் பிள்ளையார் பூசை செய்தது?— ஐயர்.

வழ: ஐயர் பெயர் என்ன? — தெரியாது.

இக் கட்டத்தில் சாட்சி இடைமறித்து ஐயா நான் பெரியமனுசன் வயதானவன், இந்த வயதில் பொய் பேசமாட்டேன். நடந்த விஷயம் உண்மை, பெண்பழி பொல்லாதது வீண் கேளவிகள என்னைக் கேட்கவேண்டாம். என்னுல் நிற்க முடியாது, என்ருர், உடனே அவருக்கு ஆசனம் கொடுக்கப்பட்டது. உட்கார்ந்துகொண்டார்,

வழ; நீங்கள இந்த வயதில் பொய் கூறுவது சரியா? இவர்கள கல்யாணம் செய்து குடும்பமாக இருந்ததைநீர்கண்ணுல்கண்டீரா?

என்னையா கதை இது பெண்பழி பொல்லாதது. இரண்டுபேரும் குடும்பமாக இருக்கவில்லை என்று அவர் தமது கல்விமீது சத்தியம் செய்துதருவாரா?

(கோட்டில் சிரிப்பு)

அடுத்து மனுதாரின் மூத்த சகோதரரான கந்தையா ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைக்குசென்றுர்; ஆனல் விதிவிளையாடிவிட்டது

மாவிட்டபுரம், வெள்ளி

வேலைக்குச் சென்ற தபால் ஊழியர் இடைவழியில் மயக்கமடைந்து மூர்ச்சித்து மரணமானர். சீர்மையில் நேற்று இச்சம்பவம் நிகழ்ந்தது.

மாதகலில் வசிக்கும் தபால் ஊழியரான இம்மானுவேல் நட்சத்திரம் (வயது 45)என்பவர் சீர்மைக்கு வந்து தமது வேலைக்காக வல்வெட்டித்துறை தபால் நிலையத்துக்கு செல்வதற்காக சீர்மையில் பஸ்ஸுக்காக நின்றபோது மயக்கம் அடைந்து விழுந்தார். உடன் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு அவர் மரணமானர்.

இவரின் மரணம் குறித்து காங்கேசன்துறை பகுதி திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு வி குமரகுரு விசாரணை நடத்தினர்.

விசாரணையின்போது இறந்தவருக்கு மார்பு நோய் இருந்ததாக அவரின் மனைவி தகப்பன் ஆகியோர் சாட்சியமளித்ததை யடுத்து மரண விசாரணை அதிகாரி இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

# 'மேல்நாட்டார் அமைதிதேடி ஆத்மீகத்தை நாடுகின்றனர்'

— சுவாமி பிரணவானந்த

யாழ்ப்பாணம், சனி

'மேல்நாட்டவர் பொருளாதார விஞ்ஞான முன்னேற்றத்தின் உச்சநிலையை அடைந்தபோதும் அவர்கள் அவற்றினுல் கணப்பூற்று மன அமைதியைத் தேடி, ஆத்மீக அறிவுபெற கீழைத்தேசங்களை நாடுகின்றனர் எமது பண்பாடும், கலாச்சாரம் முதலிய ஆத்மீக தத்துவங்களை நாம் உணர்ந்து, அவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிப்பதன் மூலம் மேலை நாட்டினர்க்கு ஏமாற்றம் ஏற்படாமல் அவர்களுக்கு வழிகாட்ட வேண்டும்'

இவ்வாறு மலேசிய தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தலைவர் சுவாமி பிரனவானந்த சஸ்வதி கொழும்புத்துறை ஆசிரிய கலாசாலை இந்துமாமன்றத்தின் ஆதரவில் சென்ற வியாழக்கிழமை சைவசமய அடிப்படைத் தத்துவங்கள் என்னும் தலைப்பில் நிகழ்ந்த கருத்தரங்கில் கூறினர்.

கலாசாலை அதிபர், விரிவுரையாளர் வித்துவான் கணபதி ஆசிரிய மாணவர் பலர் இக்கருத்தரங்கில் பங்குபற்றினர்.

யாழ் பெரியாஸ்பத்திரியில்

# தொற்று நோயாளர் வார்ட் நேற்று திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம் சனி

யாழ்ப்பாணம் தொற்று நோயாளர் தடுப்பு கட்டிடத்தை சுகாதார அமைச்சின் நிரந்தரக்காரியதரிசி திரு.சி பாலசிங்கம் நேற்றுதிறந்து வைத்தார்.

சுமார் 6 லட்சம்ருபாசெலவில்அமைக்கப்பட்ட இக்கட்டிடத் திறப்புவிழாவில் யாழ்ப்பாண எம் பி. திரு.ஜி ஜி. பொன்னம்பலம், அரசாங்க அதிபர் திரு.பீற்றஸ் யாழ்ப்பாணம் சுகாதாரப்பகுதி அதிபர் திரு குணசேகரா ஆகியோர் கலந்துகொண்டனர்.

நிரந்தரக்காரியதரிசி திரு. சி. பாலசிங்கம், அரசாங்க அதிபர், வைத்திய சுப்பிரின்டன் டாக்டர் சண்முகநாதன், திரு ஜி ஜி பொன்னம்பலம், எம். பி. சுகாதாரப் பகுதி சுப்பிரின்டன் ஆகியோர் ஆஸ்பத்திரி வார்ட்டுகளுக்குச்சென்று பார்வையிட்டனர். வார்ட்டுகளில் உள்ள குறைபாடுகள் பற்றி திரு பாலசிங்கத்துக்கு தெரிவிக்கப்பட்டது

பிரசவ வார்ட்டின்நிலைமை மிகமோசமாக இருப்பதாக சுகாதார டைரக்டர் திரு குணசேகரா அடிக்கடிதமது சகாக்களிடம் கூறினுர்.

(குவிம)

மொழியைத் தெரிவித்தார்.

சிறுபான்மையினர் உரிமைகளுக்காகப் போராடுவதை கம்யூனிஸ்ட் கட்சி ...கவிடவுமில்லை சிறுபான்மை மக்களைக் காட்டிக் கொடுத்துவிடவுமில்லை

கள்...டத்தை எதிர்ப்பது பற்றியும் அவர் விளக்கம் கூறினுர். இச்சட்டத்தின் கீழ் அரசாங்கம் தமிழைவிட ஆங்கிலத்திற்கே இடங் கொடுக்கின்றது என்றுர் அவர்.

இப்போதிருக்கும் முதலாளித்துவ முறையினுல் ஒரு சிலரே பயனடைந்துவருகிருர்கள். சோஷலிஸ அமைப்புத்தான் சகல மக்களுக்கும் நன்மைபுரியக்கூடிய ஒரே வழி. ஆனுல் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் சோஷலிஸம் வளர்வதை எதிர்த்துவருகிருர்கள் என்று திரு. கெனமன் மேலும் குறிப்பிட்டார்.

## உற்சவம்

யாழ்ப்பாணம், சனி

இன்று கோண்டாவில் கிழக்கு நாகபூஷணி அம்பாள் ரதோற்சவம் நடைபெறுகின்றது. புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத் தேரில் அம்பாள் ஆரோகணம் செய்வார். நாளை தீர்த்தோற்சவம் நடைபெறும்.

வடக்கில் யு. என். பி. யில் போட்டியிட

# விண்ணப்பித்தவர்களுக்கு தலைமைப் பீடம் அழைப்பு

கோட்டை சனி

வடபகுதிகளிலுள்ள சில தொகுதிகளில் யு. என். பி. சார்பில் போட்டியிடுவதற்கு விண்ணப்பித்தவர்களை யு என் பி தலைமைப்பீடம் அழைதிருப்பதாக அறியப்படுகிறது.

அடுத்த வாரம் கொழும்பிலுள்ள தலைமைப்பீட அலுவலகத்தில் இவர்களைநேரில் சந்தித்து. போட்டியிட நிறுத்துவது சம்பந்தமான இறுதி முடிவு எடுக்கப்படவுள்ளது.

உடுப்பிட்டி கோப்பாய் சாவகச்சேரிஉட்பட மற்றும் சில தொகுதிகளில் யு என் பி சார்பில போட்டியிட விண்ணப்பிக்கப்பட்டுள்ளன.

ஐக்கியதேசியக் கட்சியில் நீண்டகால அங்கத்தவராக இருந்து வரும் தான் இம்முறை உடுப்பிட்டித் தொகுதியில் யு என் பி சார்பில் போட்டியிடப் போவதாக திரு. கணேசலிங்கம் ஐயாத்துரை ஜே.பி. தெரிவித்தார் இவரும் உடுப்பிட்டித் தொகுதியில் யு என் பி சார்பில்போட்டியிட கட்சியின் அனுமதியைக கோரியுள்ளார்.

பஸ்-கார் மோதல்

# தேர்தலில் போட்டியிட இருந்தவர் நிலைமை மோசம்

கொழும்பு, வெள்ளி

கம்யூனிஸ்ட் கட்சி வாலிப முன்னணித்தலைவரும், களவானை தொகுதியில் கூட்டாட்சிக்கட்சியின் சார்பில் போட்டியிட விருப்பவருமான திரு. சரத் முத்தட்டுவகம பலத்தகாயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொரளையில் திரு முதத்டுவகமவின் காரும் மோட்டார்சைக்கிள் ஒன்றும் பஸ் ஒன்றுடன் மோதிக் கொண்டதால் ஏற்பட்ட விபத்தில் இவர் படுகாயமடைந்தார். மோட்டார்சைக்கிளை செலுத்திச் சென்றவர் ஸ்தலத்திலேயே பலியானுர்.

திரு. முத்தட்டுவகமவின் நிலைமைமிகமோசமாகஇருப்பதாக அறிவிக்கப்பட்டது.

(சி பி ஏ)

## வரவேற்பு

யாழ்ப்பாணம், சனி

தலூடி போரா சமூகத்தின் தலைவர் சங்கைக்குரிய கலாநிதி செயினுட் முகமட் புர்ஹானுடின் சாகிப்புக்கு நாளை மாலை யாழ். நகர மண்டபத்தில் பொதுவரவேற்பளிக்கப் படவிருக்கிறது.

## சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், சனி

நாளை சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் குளிர்த்தியும் 108 சங்காபிஷேகமும் நடைபெறும். இவ் விசேஷ பூசையின் பின்னர் அம்பாளை எழுந்தருளச் செய்து பிரசாதம் வழங்கப்படும்.

## வெளியாகும்

கொழும்பு, வெள்ளி

மேமாதம் 10ம் திகதி வரையில் ஜீ சீ ஈ. சாதாரணப் பரீட்சையின்முடிவுகள் வெளிவரும் என பரீட்சை இலாகாப் பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சை முடிவுகளை ஏப்பிரல்நடுப்பகுதியில் வெளியிட பரீட்சை இலாகா தீர்மானித்திருந்தது. ஆனுல் விடைத்தாள்கள் திருத்தப்பட்டு புள்ளி விபரங்கள் இலாகாவுக்குக்கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாலேயே பரீட்சை முடிவு தாமதமாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.


# இன்று தேர்த் திருவிழா

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் தேர்த்திருவிழாவான இன்று பகல் 11-00 மணிக்கு பூஜையும் பகல் 12 மணிக்கு பஞ்சரதாரோகணமும், மாலை 5 மணி முதல் ரத அவரோகணமாகி மண்டகப்படியும் பஞ்சமூர்த்திகள் வசந்தமண்டபம் சேர்க்கையும், மாலை3-4 மணி வரை செல்விகள் சரோஜினி தேவி, ஜெகதீஸ்வரியின் இன்னிசைக் கச்சேரியும் பகல் 7-8 மணிவரைசெல்வி சாந்தநாயகி சுப்பிரமணியத்தின் இன்னிசைக் கச்சேரியும் நடைபெறும்.

மாவிட்டபுரம், சனி

மாவிட்டபுரம் உபதபால் நிலையம் 'ஏ' கிறேட்டருக்கு அடுத்தமாதம்முதல் உயர்த்தப்படவுள்ளது

மாவிட்டபுரம் உபதபால் நிலையம் 'சி' கிறேட்டிலிருந்து 'பி' கிறேட்டுக்கு உயர்த்தப்பட்டுள்ளது



கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோயில் பொங்கல்விழா இன்று நடைபெறுகின்றது. தலவரலாறு 4-ம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.

மனுதாரரான ஞானேஸ்வரி பச்சை மணிப்புரிஷ்ரேஸ் பொட்டு சேலை அணிந்து முன்றுனையால் போர்த்தபடி நாரதர் கொண்டையுடனும் நவீன நாகரீக கைப்பையுடனும் வந்திருந்தார். காதில் ஒரு சிறிய மணிஜிப்சியும், கையில் கறுப்புநிற மட்டை பிளாஸ்டிக்காப்பும் அணிந்ந கொண்டு குனிந்ததலை நிமிராமல் இருந்துகொண்டிருந்

...குடும்பமாக இருந்தார்கள்?— அவர்கள் நெடுகலும் பெண்சாதி புருஷருகவே இருந்தனர்.

(கோர்ட்டில் சிரிப்பு)

வழ: நீர் பெண்ணுடன் தாலி கட்டும் இடத்திற்கு போனீரா?— இல்லை, மாப்பிள்ளையுடன்தான் போனேன்.

மாஜிஸ்திரேட்: கல்யாணத்திற்கான என்ன

இருக்கவில்லை என்று அவர் தமது கல்விமீது சத்தியம் செய்துதருவாரா?

(கோட்டில் சிரிப்பு)

அடுத்து மனுதாரின் மூத்த சகோதரரான கந்தையா சிவசிங்கத்தின் சாட்சியத்தையும் பதிவு செய்து கொண்ட மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை ஏப்ரல் மாதம் 8 ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

சென். ஜோன்ஸ் — சென்றல் மோதல்

# 'சபாஷ்' ரஞ்சிற்குமார்

## சென்றல்–177, சென். ஜோன்ஸ் -44–8

— நமது நிருபர் தேவா —

யாழ்ப்பாணம், சனி

''சபாஷ் ரஞ்சிட்குமார்'' ''வெல்டன் ரஞ்சிட்குமார்'' என்ற கரகோஷமே நேற்றைய ஆட்டநேரம் முழுவதும் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடைவிடாது ஒலித்துக் கொண்டிருந்தது

சென்றல்-சென். ஜோன்ஸ் கல்லூரிகளின் 72-வது மாபெரும் கிரிக்கெட் போட்டியின், நேற்றைய ஆட்டத்தில் சிறந்து விளங்கியவர் யாழ். மத்திய கல்லூரியின் வீரர் றஞ்சிட்குமார்தான். இப் போட்டியில் இவர் சிறப்பாக துடுப்பெடுத்தாடியும், சாதுரியமாகப் பந்து வீசியும், நேற்றைய ஆட்டத்தில் தமது கல்லூரியை முன்னணியில் திகழ வைத்தார்.

நேற்றைய ஆட்டம் தொடங்குமுன், இரு கல்லூரிகளுக்குமிடையில் நடைபெற்ற 'நாணயச்சுண்டலில்'' சென். ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்ற போதும், யாழ். மத்திய கல்லூரியை முதலில் துடுப்பெடுத்தாடும்படி விட்டுவிட்டார்கள்.

யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸ் துடுப்படியை ஆரம்பித்து 15 நிமிடங்களின் பின், அடுத்தடுத்து விக்கெட்டுகளை இளக்கத் தொடங்கி விட்டது. இக் கோஷ்டி 5 விக்கெட்டுகளை இழந்த போது ஆக 36 ஓட்டங்களைப் பெற்றது. இதன் பின் துடுப்பெடுத்தாடிய காப்டன் ஆர். ராஜசிங்கம் எதிர்க் கோஷ்டியின் பந்து வீச்சை மிக சாதுரியமாக எதிர்த்து விளையாடினுர். ஆனுல் இவர் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மத்திய போசன இடைவேளையின் போது மத்திய கல்லூரி 79 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகளை இழந்து மிக ஆபத்தான கட்டத்தை எதிர்நோக்கியிருந்தது. இச் சந்தர்ப்பத்தில், சென். ஜோன்ஸ் கோஷ்டியின் பந்து வீச்சும், பந்து தடுப்பும் பாராட்டக் கூடியவிதமாகவே இருந்தது.

இடைவேளையின் பின் துடுப்பெடுத்தாடிய ரஞ்சிற்குமார், மகேந்திரன், பிரேமச்சந்திரன் ஆகியோரின் வேகமான துடுப்படியால், சென். ஜோன்ஸ் கோஷ்டியின் வீரர்கள் மிகவும் சோர்வடைந்து விட்டதால் ஓட்டங்களின் எண்ணிக்கை வாயுவேகமாகக் கூடிக்கொண்டிருந்தது இம்மூன்று வீரர்களும் ஆட்டமிழக்கும் போது முறையே 44, 34, 20 ஓட்டங்களை எடுத்தனர். யாழ். மத்திய கல்லூரி முதல் இன்னிங்ஸில் மொத்தம் 177 ஓட்டங்களை எடுத்தது. ஸ்ரீ ராமரட்ணம், செல்வநாயகம், மனோகரன், அல்போன்ஸஸ் ஆகியோர் முறையே 3, 3, 2, 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

சென். ஜோன்ஸ் தனது முதல் இன்னிங்ஸை தொடங்கியதும், விக்கெட்டுகளை ஒன்றின்பின் ஒன்றுக மிக வேகமாக இழக்கத் தொடங்கியது. இதில் சிவக்குமார் 13 ஓட்டங்களுடனும், பாலஜோதி 05 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். காப்டன் தெய்வேந்திரா 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காது இருக்கிருர். அல்போன்ஸஸ், தேவபாலன், நவீனன், ஸ்ரீ ராமரட்ணம் ஆகியோர் எதுவும் எடுக்காது ஆட்டமிழந்தனர். சென். ஜோன்ஸ் கோஷ்டி இன்றைய ஆட்ட இறுதியில் 8 விக்கெட்டுகளை இழந்து மொத்தம்44 ஓட்டங்களைப் பெற்றது.

ரஞ்சிற்குமார் 4 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், ஜெயரட்ணகுமார், ஜெயலிங்கம், பிரேமச்சந்திரன் ஆகியோரும் முறையே 2, 2, 1 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

ஆட்டம் இன்று காலை 10-30-க்கு மீண்டும்தொடர்ந்து நடைபெறும்.

(தே. நி)

## காலமானுர்

புதுடில்லி, மார்ச் 20

பீகார் மாநிலத்திலிருந்து இந்திய லோக்சபைக்குத் தெரிவு செய்யப்பட்டிருந்த திரு ஜயப்பால்சிங் எம்.பி இன்று காலமானுர்.

67 வயதான அவர் ஆதிவாசிகளின் மிக முக்கிய தலைவராக இருந்து வந்துள்ளார். அதே சமயம் அவர் சிறந்த விளையாட்டு வீரராகவும் திகழ்ந்தார் 1928ம் ஆண்டில்இந்திய ஹொக்கிக் கோஷ்டிக்கு தலைமைவகித்து இந்தியாவுக்கு வெற்றியீட்டிக் கொடுத்தார்.

திரு. ஜயப்பால்சிங் மரணம் குறித்து இன்று லோகசபையில் அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

**WANTED**

Wanted experience young Accounts Clerk apply with copies of testimonials by own hand writing. Advt No 1938 C/o. Eelanadu, Jaffna
1938

**புத்தகம்**

றிப்போட்

மாணவர் தேர்ச்சி அறிக்கை விரும்பிய விதமாக அழகாக அச்சிட்டுக் கொடுக்கப்படும். விபரங்கட்கு மாதிரிப்பிரதிகட்கும் ஆசிரியர்கள் தொடர்புகொள்க. கலாபவன அச்சகம், வியாபாரிமூலை, பருத்தித்துறை.
193

**விற்பனைக்கு**

25 சிறி 2927 டிரக்ரர் உடன்விற்பனைக்கு இருக்கின்றது. தொடர்பு கொள்ளவும். க. வி. நடராசா, 'பத்மவாசம்', கரம்பகம், மிருசுவில்
1935

**தேவை**

தென்னந்தோட்டம்

பழை வட்டாரத்தில் 50 ஏக்கர் ரேட் ஒரமுள்ள காய்க்கிற இளம தென்னந்தோட்டம் தேவை. முழு விபரங்களுடன் நியாயமான விலையைக் குறிப்பிட்டுத் தொடர்புகொள்ளவும். W.M. இராசா, இராசமகால், மானிப்பாய்.
1936


## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

(செய்திகள்: காலை 6 45, பகல 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 செய்திச் சுருக்கம், 8-03 நிலையஒலிப் பதிவுகள், 8-15 இஸ்லாமிய கீதம், 8-30 செய்திச்சுருக்கம்

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 செய்திச் சுருக்கம், 12-03 திரைகானம், 1-00 அரங்கேற்றம் 1-30 செய்திச்சுருக்கம்.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 செய்திச் சுருக்கம், 4-28 கல்வி ஒலிபரப்பு, 5-00 செய்திச்சுருக்கம், 5-03 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-30 ஒடிவிளையாடு பாப்பா.

இரவு 6-15 இசைப்பயிற்சி 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம் 7-03 கிராம சஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்...

## மரண அறிவித்தல்

**கு பொன்னம்மா**

வதிரியில் உள்ள திருவாளர் குட்டி அவர்களின் அன்பு மனைவியும், றியோவைற் ஸ்தாபனத்தின் உரிமையாளருமாகிய திரு அமிர்தலிங்கத்தின் அன்புத் தாயார் திருமதி பொன்னம்மா அவர்கள் காலமாகி விட்டார். இத்தகவலை நண்பர்களும், உறவினர்களும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
1937

## வேலணை இசை விழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

வேலணை அரசினர் மத்திய கல்லூரியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இசை விழாவின் இரண்டாம் நாளான இன்றைய நிகழ்ச்சிகள் வருமாறு:-

மாலை 3-30 4-00 மேளக கச்சேரி: சின்னராசா கோஷ்டியினர், 4-00-4-30: மங்கள வாத்தியம், 4-30 4-45 திரு. வி அருணகிரி ஜே.பி. விழாவை ஆரம்பித்து வைத்தல், 4-45-5-15 பாட்டு: செல்வி கிருபாலினி விஸ்வலிங்கம், 5-15 6-00 பாட்டு: திரு. பி. முத்துக்குமாரசாமி சர்மா, 6-00-6-45 பாட்டு: லிங்கம் சகோதரர்கள். 6-45 7-30 பாட்டு: செல்வி நாகம்மா கதிர்காமர், இரவு 7-30-7-45 தலைமையுரை: திரு. ஜே. எஸ் அரியரத்தினம் (அதிபர் வேலணை மத்திய கல்லூரி) சிறப்புரை: உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. ஏ. ஏ. ஜோசப்.

7-45-8-30 பாட்டு: திருமதி லீலாவதி சண்முகதாஸ், 8-30-9-30 பாட்டு: திருமதி சரஸ்வதி டாக்கியராசா, 9-30-10-30 பாட்டு: பரம் தில்லைராசா.

......

## வலி. கிழக்கு பேச்சுப் போட்டி

உடுப்பராய், வெள்ளி

வலிகாமம் கிழக்குத் தமிழாசிரியர் சங்கத்தின் சார்பிலான பேச்சுப்போட்டி நாளை சனிக்கிழமை முற்பகல் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

வடஇலங்கைத் தமிழாசிரியர் சங்கத் தலைவர் பண்டிதமணி ச. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறவிருக்கும் குறித்த பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே...


## கேள்விவிளம்பரம்

### முசலி வடக்கு கிராமசபை, அரிப்பு

1970-ம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 5-ம் திகதி காலை 9-00 மணிவரை 'அகத்திமுறிப்பு ரோட்' அரசினர் நன்கொடை வேலைக்கு முசலி வடக்கு கிராமசபை அக்கிராசனரால் சீல்வைத்த கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

இக்கேள்விப் பத்திரத்தின் பிரதி வடகீழ் பகுதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் (மன்னார்) அவர்கட்கு அதே தேதியில் கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

உத்தியோக பூர்வமாக கேள்விப் பத்திரத்தின் கிரயம் ரூபா 10-00 (இப் பணம் திருப்பிக் கொடுபடமாட்டாது) கேள்விப் பத்திரப் பிணைப் பணம் ரூபா 130-00 கட்டி ஒப்பந்தக்காரர் ஏப்பிரில் மாதம் 4-ம் திகதிவரை கிராமசபைக் காரியாலயத்தில் கேள்விப் பத்திரங்கள் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

இதுசம்பந்தமான விபரங்கள் யாவும் மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கந்தோரிலும், முசலி வடக்கு கிராமசபை அலுவலகத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

மு. மீராசாகிபு,
அக்கிராசனர்,
முசலி வடக்கு கிராமசபை.
முசலி வடக்கு கிராமசபை,
அரிப்பு 19-3-70.
2002

## சங்கானைப் பட்டினசபை கேள்விவிளம்பரம்

1970-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5-ம் திகதி பகல் 12-00 மணி வரைக்கும் மேற்படி பட்டினசபைத் தலைவரால் 4-ம் வட்டாரத்திலுள்ள சாத்தனுவத்தை வீதிக்குக் கல்லுப்பதித்துத் தார் ஊற்றுவதற்கு ஒப்பந்தக் காரர்களிடமிருந்து கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விப் பத்திரம் ஒவ்வொன்றிற்கும் கேள்விப் பிணைப்பணம் ரூபா 25/-ம், கேள்விப் பத்திரப் பணம் ரூபா 2/-ம் செலுத்தியதின் பேரில் 4-4-70 பிற்பகல 3-00 மணிவரை தலைவரால் வழங்கப்படும். கேள்விகள் உத்தியோகபூர்வமான பத்திரங்களில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஏனைய விபரங்கள் சங்கானைப் பட்டினசபை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

சி. வயிரமுத்து.
தலைவர்,
பட்டினசபை, சங்கானை.


பருத்தித்துறை வட்டார பாடசாலைகள்

## மெய்வல்லுநர் விளையாட்டு போட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, வெள்ளி

பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகளின் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. விழாவுக்கு டாக்டர் எஸ். கதிர்காமத்தம்பி தலைமை வகித்தார்.

வெற்றி பெற்ற வீரர்களுக்கு திருமதி கதிர்காமத்தம்பி பரிசில்களை வழங்கினார்

வட்டாரக் கல்வி அதிகாரி திரு. க. நவரத்தினத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இப்போட்டிமுடிவுகள்வருமாறு:

13 வயது ஆண்கள்

75 மீ. ஓட்டம்: க தங்கவேல் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை, இ அருட்பிரகாசம் கலட்டி றோ க த பாடசாலை, க மேகவண்ணன் மந்திகைங்கேணி இ த க பாடசாலை

100 மீ. ஓட்டம்: க தங்கவேல் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை, சி தங்கவடிவேல் வல்வை சிவகுரு வித்தியாசாலை, கொ டொன் பொஸ்கோ கலட்டி றோ க த பாடசாலை

உயரம் பாய்தல்: கு சிவானந்தம் உடுத்துறை மகா வித்தியாலயம், ப கஜேந்திரராஜா பொலிகண்டி சைத க பாடசாலை, நா யோகேஸ்வரன் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை

நீளம் பாய்தல்: கு சிவானந்தம் உடுதுறை மகா வித்தியாலயம், க மேகவர்ணன் மருதங்கேணி இ த க பாடசாலை, கி தங்கவடிவேல் வல்வை சிவகுரு வித்தியாசாலை,

13 வயது பெண்

75 மீட்டர் ஓட்டம்: க செல்வரத்தினம் அல்வாய் தெற்கு அ த பாடசாலை, க தங்கமலர் நாகர்கோவில் மகாவித்தியாலயம், ஆ. சரஸ்வதி அல்வாய் தெற்கு அ த பாடசாலை

100 மீட்டர் ஓட்டம்: க செல்வரத்தினம் அல்வாய் தெற்கு அ த பாடசாலை, ஆ சரஸ்வதி அல்வாய் தெற்கு அ த பாடசாலை, பொ ஈஸ்வரியம்மா நாகர் கோவில் மகாவித்தியாலயம்

11 வயது ஆண்கள் 50 மீட்டர் ஓட்டம்: கிஸ்ரா அன்ரன் செம்பியன்பற்று றோ த க பாடசாலை, அ. குகனேஸ்வரலிங்கம் அ சி பாடசாலை, சி பார்த்திபன் தட்டாதெரு பாடசாலை.

75 மீட்டர்: கிறிஸ்ரா அன்ரன் செம்பியன்பற்று றோ க பாடசாலை, இ விஜயசிங்கம் உடுத்துறை மகா வித்தியாலயம், அ. குகனேஸ்வரலிங்கம் அல்வாய் சி வித்தியாசாலை.

50 மீட்டர்: மு சிவனேஸ்வரி பொலிகண்டி சைவத் தமிழ்ப் பாடசாலை, செ ரூபரசனி புலோலி கிழக்கு அ த பாடசாலை, அ மேரி கிறிஸ்ரா செம்பியன்பற்று றோ க பாடசாலை.

ஆசிரியர்கள் போட்டி முடிவு உயரம் பாய்தல்: கே பரமநாதன் அல்வாய் ஆனந்தசேமகே வித்தியாசாலை, கே தம்பித்துரை அ ஆ சேமகே வித்தியாசாலை:

நீளம் பாய்தல்: கே தம்பித்துரை அ ஆ சேமகே வித்தியாசாலை, கே பரமநாதன் அ ஆ சேமகே, ரி சின்னராசா அ ஆ சேமகே

குண்டெறிதல்: இ பாக்கியநாதர் வல்வை றோ க பாடசாலை, ரி கனகரத்தினம் அல்வாய் ஸ்ரீலங்கா, ரி செபமாலை செமபியன்பற்று றோ க பாடசாலை.

## காங்கேசன் ஊழியர் அடையாள வேலை நிறுத்தம் செய்வர்?

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன் துறைசீமெந்து கூட்டுத்தாபன யூனியன்கள் இம்மாதம் 23-ம் திகதி அடையாள வேலைநிறுத்தம் ஒன்றை மேற்கொள்ளலாம்

காங்கேசன்துறை பொது தொழிலாளர் யூனியன் 25 கோரிக்கைகள் கொண்ட மகஜரொன்றை 21 நாள் காலக்கெடு கொடுத்து கைத்தொழில் அமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார்கள்.

ஆனால் அமைச்சர் இது வரை பதில் அனுப்பாத காரணத்தால் அடுத்துஎன்ன...

இலங்கை

### தமிழ் கத்தோலிக்க இலக்கியக்கழகம்

பண்டத்தரிப்பு, வெள்ளி

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச்சேர்ந்த [illegible] மேற்றிராசனங்களையும் சேர்த்து இலங்கை தமிழ் கத்தோலிக்க இலக்கியக்கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கைவாழ் [illegible] கத்தோலிக்க மக்களுக்[illegible]...

## தாச்சிப் போட்டி

வேலணை, வெள்ளி

தீவுப்பகுதி விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சிப் போட்டி இம்மாத இறுதியில் வேலணை கிராமச்சபை விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது. இப் போட்டியின் போது வேலணை செட்டிபுலம் சனசமூக நிலையமும்தேவி கோட்டம்சனசமூகநிலையமும்போட்டிகளில் வெற்றிபெற்று இறுதிப் போட்டியாக பங்குபற்றுகின்றன.

## சாம்பியன்கள்

உடுப்பிட்டி, வெள்ளி

உடுப்பிட்டி வட்டாரக் கனிஷ்ட பாடசாலைகளின் வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் ஆண்கள் பிரிவில் வதிரி தேவரையாளி இந்து கல்லூரியும் பெண்பிரிவில் நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலையும் சாம்பியன் கேடயங்களைச் சுவீகரித்துக் கொண்டன.

## கலந்துரையாடல்

சுழிபுரம், சனி

பண்டத்தரிப்பு பட்டினசபையின் எல்லைக்குட்பட்ட எல்லா சனசமூகநிலையங்களினதும் கலந்துரையாடல் எதிர்வரும்23-3-70-ந் திகதி காலை பட்டினசபை மண்டபத்தில் நடைபெறும். யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் மேற்பார்வை அதிகாரி இக் கூட்டத்தில் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

மேலும் சமீபத்தில் நடைபெற்ற யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ விழாவில் பங்குபற்றி முதலிடம் பெற்ற திருக்குறள் சனசமூகநிலைய வீரர்களுக்கு பாராட்டும் பரிசும் வழங்கப்படும். இதற்கான சகல ஒழுங்குகளையும் பட்டினசபைத் தலைவர் திரு இ. செல்வரத்தினம் செய்து வருகின்றார்.

## இடமாற்றமும் புதிய நியமனமும்

மல்லாகம், வெள்ளி

காங்கேசன்துறை கள்ளக் குடியேற்றத் தடுப்பு முகாம் பொலிஸ் சுப்ரீண்டென்ற் திரு யோசேப் கொழும்புக்கு இடம் மாற்றம் பெறுவதையடுத்து இவரின் ஸ்தானத்திற்கு பொலிஸ் சுப்ரீண்டென்ற் திரு இராமநாதன் ஏப்ரல் மாதம்முதல் நியமிக்கப்படவிருக்கின்றார்.

......

## அவர்கள் கனவு நிறைவேறுகிறது

உரும்பராய், வெள்ளி

கலைஞர்களை அரசாங்கம் நன்கு மதிக்க வேண்டும். அரசாங்கம் கலைஞர்களை உண்மையாக மதிக்கத் தொடங்கினால் கலை தானகவேவளர ஆரம்பித்துவிடும், நமது புராதன கலைகளுக்குள்தெய்வீகமானது கர்நாடக சங்கீதக் கலை. சங்கீதக் கலையை வளர்க்க ஈழத்திலும் இந்திய தேசத்திலும் முயன்றவர்கள் பலர். ஈழத்தில் கர்நாடகக் கலையை வளர்க்க தீர்க்கதரிசியானசேர்பொன் இராமநாதனும் அவரதுமருகர் சு. நடேசபிள்ளையும் பெருமுயற்சி செய்தார்கள். அவர்கள் கண்ட கனவு இப்பொழுதுதான் நிறைவேறுகிறது இராமநாதன் இசைக்கழகத்தில் இசை பயின்று சங்கீதரத்தினம் என்ற பட்டத்துக்குரிய குழந்தைகளுக்கு அப் பட்டத்தை வழங்க இலங்கை ராஜங்க அமைச்சர் திருஜே. ஆர். ஜெயவர்த்தன முன் வந்தமை போற்றுதற்குரியதாகும்.

இராமநாதன் இசைக் கல்லூரியில் இசை பயின்று சங்கீதரத்தினம் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு நேற்றுநடைபெற்ற பட்டமளிப்பு விழாவையொட்டி இசைக் கல்லூரி அதிபர் சங்கீதகலாநிதி சித்தூர் சுப்பிரமணியம்பிள்ளை நமது நிருபரிடம் மேற்கண்டவாறு கூறினர்.

சங்கீதரத்தினம் பட்டதாரதரப் பத்திரங்களை அரசாங்க அமைச்சர் திரு ஜே ஆர். ஜெயவர்த்தன வழங்கினர்.

## சங்க கடைகளுக்கு அரிசிவிற்க உத்தரவு

கோப்பாய், வெள்ளி

பங்கீட்டரிசி விநியோகிக்கும் கூட்டுறவு சங்கக்கடைகள் பங்கீட்டரிசிமட்டுமன்றி தனிப்பட்ட முறையில் அரிசி விற்பனையும் செய்யஅரசாங்கம் உத்தரவு வழங்கியுள்ளது.

கூட்டுறவு சங்கக்கடைகள் இதுவரைகாலமும் பங்கீட்டரிசியைத்தவிர தனிப்பட்டமுறையில் அரிசி விற்பனை செய்யக்கூடாது என விதிக்கப்பட்டிருந்தது. இந்தத்தடை இப்போது நீக்கப்பட்டுள்ளது. உணவுக் கமிஷனர் மேற்படிஉத்தரவைப் பிறப்பித்து இந்த தடையை நீக்கியுள்ளார். அரிசி விலை சந்தையில் அதிகரிப்பதைக் கட்டுப்படுத்தவே அரசாங்கம் இந்தநடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது.

## பாரதம் புகார்

நியூயோர்க், மார்ச் 20

திபேத்தியர்கள் சீனர்களால் நடத்தப்படும் முறை குறித்து பாரதம் ஐ. நா. மனித உரிமைகள் குழுவிடம் புகார் தெரிவித்திருக்கிறது.


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30 9-30
பிறிப்போயா, போயா 2-30
குங்குமம்

வல்வெட்டித்துறை
றஞ்சனா தியேட்டர்
தினசரி: 6-30, 9-30
பிரிபோயா, போயா 2-30
ரவிச்சந்திரன் — ஜெயலலிதா
நடித்த
மகராசி

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30, 10-00
பிரிபோயா, போயா 2-30மணி
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
நான்
(ஈஸ்ட்மென்கலர்)

REGAL JAFFNA
Daily 4-45, 7&9-45 p.m
Poya, Prepoya 4 shows
Kirk Douglas,
Robert Mitchum
in
THE WAY WEST
[color]

MANOHARA
JAFFNA
Now showing
Daily 4-45 7 & 9-45 p.m
Poya, Prepoya 4 shows
David Richard
in
ONLY WHEN I LARF
(Color)

ராணி
(யாழ்ப்பாணம்)
(தினசரி 3 காட்சிகள்)
ஸ்ரீசங்கர் [இருவேடங்கள்
ஹெலன் குமாரி, மஞ்சுளா
நடித்த
மஞ்சள் குங்குமம்

ராஜா
சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாடு பாப்பா.

இரவு 6-15 இசைப்பயிற்சி 6-30 கிராமசஞ்சிகை, 7-00 செய்திச்சுருக்கம்7-03 கிராம சஞ்சிகை, 7-15 சித்திரம், 7-45 திரைகானம், 8-00 செய்திச்சுருக்கம், 8-03 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 இசை நிகழ்ச்சி, 10-30 செய்திச்சுருக்கம்.

யர் சங்கத் தலைவர் பண்டிதமணி ச. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறவிருக்கும் குறித்த பேச்சுப் போட்டி பரிசளிப்பு விழாவில் கோப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. வே சண்முகநாதன் சான்றுப்பத்திரங்களை வழங்குவார்.


ஏனைய விபரங்கள் சங்கானைப் பட்டினசபை அலுவலகத்தில் அலுவலகநேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

சி. வயிரமுத்து,
தலைவர்,
பட்டினசபை, சங்கானை.
பட்டினசபைக் காரியாலயம்
சங்கானை, 19-3-70.

2003


# சக்தி வாய்ந்த சர்வ பூச்சி நாசினி

# பொலிடோல் ஈ-605



எல்லாக் கிருமிப் பீடைகளையும் இல்லாதொழித்து, பயிர்கள் செழிக்கவும் விளைச்சல் பெருகவும் செய்வது பொலிடோல்.

அழுக்கணவன், ஒட்டுண்ணி, பயிர்ப்பேன், பனிப்பூச்சி இலையரிப் புழு போன்றவற்றை அது அடியோடு தொலைத்து விடும்.


நெல், புகையிலை, உருளைக்கிழங்கு, மிளகாய், வெங்காயம், காய்கறி முதலிய எவ்வித பயிர்ச் செய்கையையும் பாதிக்கும் எல்லாவித பூச்சி, புழுக்கள், கிருமிகளையும் அழிக்கும் சக்தி வாய்ந்தது — பொலிடோல்.

பொலிடோலின் விலையில் எவ்வித மாற்றமுமில்லை.

100 சி. சி. ( 4 அவுன்ஸ்) விலை = ரூ. 5/-
250 சி. சி. ( 9 அவுன்ஸ்) விலை = ரூ. 10/-
1000 சி. சி. (35 அவுன்ஸ்) விலை = ரூ. 35/-

பொலிடோல் ஒரு பேயர் தயாரிப்பு. நம்பிக்கையான விஷயமறிந்த விநியோகஸ்தரிடம் கிடைக்கும். இலவச அறிவுரைச் சேவைக்கு எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**பயிர்களைக் காத்துப் பண லாபம் பெறப் பாவியுங்கள் — பேயர் விவசாய ரசாயனப் பொருள்கள்.**



மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்:
பேயர்,
ஜெர்மனி

BAYER

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.


...கைஜரொன்றை 21 நாள் காலக்கெடு கொடுத்து கைத்தொழில் அமைச்சருக்கு அனுப்பியிருந்தார்கள்.

ஆனால் அமைச்சர் இதுவரை பதில் அனுப்பாத காரணத்தால் அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பதென பொதுத் தொழிலாளர் யூனியன் ஆராய்ந்தது.

நேற்று மாலை சீமெந்துக் கூட்டுத்தாபனத்தைச் சேர்ந்த சீமெந்து பொதுத்தொழிலாளர் யூனியன் வர்த்தக ஊழியர் சங்கம் சீமந்து தொழிலாளர் சங்கம் ஏத்துவிங் ஒப்பிறேசன் யூனியன் ஆதியன கலந்து ஒரு பிரமாண்டமான கூட்டத்தை நடாத்தி இம்மாதம் 23-ம் திகதி ஓர் அடையாளவேலை நிறுத்தம் மேற்கொள்வதென முடிவாகியது.

இத் தீர்மானத்தின் பிரதிகள் கவர்னர்ஜெனரல் பிரதமர் கைத்தொழில் அமைச்சர் தொழில் கமிசனர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

புத்தளத்தில் நிகழும் சீமெந்து தொழிற்சாலை திறப்புவிழாவில் தொழிலாளர் ஒருவரும் கலந்துகொள்ளக் கூடாது என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

23-ம் திகதி அடையாள வேலைநிறுத்தத்தில் கேற் கீப்பர், கண்டீன் தொழிலாளர் பாதுகாவலர் ஆகியோர் கலந்து கொள்ளத் தேவையில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மற்றும் சீமெந்துதொழிலாளர் யூனியன் பிரதிநிதிகளும் உரை நிகழ்த்தினர்.

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

பருத்தித்துறை, சனி

கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் ''வேலுப்பிள்ளை'' 'சிவா'' வெற்றிக் கேடயங்களுக்கான மூன்றும் வருட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி இம்மாதம் இறுதியில் ஆரம்பமாகிறது. இதில் முதலாவது வெற்றிபெறும் கோஷ்டிக்கு 'வேலுப்பிள்ளை வெற்றிக் கேடயமும், இரண்டாவது வெற்றிபெறும் கோஷ்டிக்கு ''சிவா'' வெற்றிக்கேடயமும் வழங்கப்படவுள்ளன.

......

## ஆசிரியர் இடமாற்றம்

பருத்தித்துறை, வெள்ளி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. எம். பி. செல்வரத்தினம் இம்மாதம் 10ம் திகதியிலிருந்து வல்வை சிதம்பரக் கல்லூரிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

...நிராசனங்களையும் சேர்த்து இலங்கை தமிழ் கத்தோலிக்க இலக்கியக்கழகம் ஒன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

இலங்கைவாழ் கத்தோலிக்க மக்களுக்கு சிறந்த கத்தோலிக்க நூல்களை அச்சிட்டு அளிப்பதற்கென மேற்படி கழகம் நிறுவப்பட்டுள்ளது.

இக்கழகத் தலைவராக அதிவந். தீயோகுப்பிள்ளை ஆண்டகையும் உபதலைவராக அருட்திரு பொன்னையா அடிகளாரும் செயலாளராக அருட்திரு எஸ் ஜே. இம்மானுவேல் அடிகளாரும் நியமனம்பெற்றுள்ளனர்.

...வதையடுத்து இவரின் ஸ்தானத்திற்கு பொலிஸ் சுப்ரீண்டென்ற் திரு இராமநாதன் ஏப்ரல் மாதம்முதல் நியமிக்கப்படவிருக்கின்றார்.

......

## நவரத்தினம் சொற்பொழிவு

மல்லாகம், சனி

சுன்னாகம் பட்டினசபை ஆராய்வு குழுக் கருத்தரங்கில் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வ. நவரத்தினம் நாளை மாலை 6.30 மணிக்கு 'தமிழரின் இன்றைய நிலையும் எதிர்காலமும்' என்ற தலைப்பில் சொற்பொழிவு நிகழ்த்த விருக்கின்றார்.

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 8-ம் திகதி [21-3-70]

**சோதிடக்கலாநிதி திருமலை க. வேலுப்பிள்ளை**

**மேஷம்-** நீண்டநாள் பிரச்னையில் இன்று சமரச முடிவு காணப்படும். மற்றவர்கள் மத்தியில் நல்ல பெயரைச் சம்பாதித்துக்கொள்வீர்கள். அரசியலில் சிலருக்கு ஆர்வம் பிறக்கக்கூடும்.

**ரிஷபம்-** கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். எதையும் சிறப்புடன் செய்வதற்கு விரும்புவீர்கள். ஓவியர்கள் வாழ்க்கை ஒளிமயமாகும். சிலருக்கு இடமாற்றமும் ஏற்படலாம். கலைஞர்களுக்கு நல்லதினம்.

**மிதுனம்-** இன்று அதிக ஆதாயம் கிடைக்கும். புதுத் தொழில்முறைகளை மனம் நாடும். நீண்டநாள் பிரயாணத்திற்கும் இடமேற்படலாம்.

**கடகம்-** அற்பவிடயத்திற்கும் ஆத்திரப்படுவீர். நெருங்கிய நண்பர் ஒருவரைப் பகைத்துக்கொள்ளநேரிடலாம். அடக்கம் வேண்டும்.

**சிம்மம்-** அவசரப்புத்தியினால் விபரீதங்கள் விளையலாம். கோபத்தை அடக்கின் நிலைமை சீர்பெறும். அடக்கமாக இருக்கவும்.

**கன்னி-** பூமியால் அதிக லாபம் கிடைப்பதற்கு இடமுண்டு. விவசாயிகள் வாழ்க்கையில் நல்ல மாறுதல் ஏற்படும். மணவாழ்க்கையில் நன்மையான மாற்றங்கள் உருவாகும். அமைதி தரும்தினம்.

**துலாம்-** எதிலும் அவசரப்போக்கைக் கடைப்பிடிப்பீர்கள். தரக்குறைவான தகவல்கள் கிடைக்கக்கூடும். பெரியவர் ஒருவருடன் கருத்துவேற்றுமை தோன்றலாம். அடக்கம்வேண்டும்.

**விருச்சிகம்-** வாழ்வில் இன்று வெற்றித் திருநாளாகும். எதிலும் அதிர்ஷ்டம் உங்கள் பக்கமே இருக்கும். புதிய பொருட்கள் கொள்வனவு செய்வதற்கு நன்று. வெளியிடத்துத் தொடர்புகளும் சிறப்பைத் தரும்.

**தனுசு-** மகிழ்ச்சிதரும் செய்தியொன்று கிடைக்கக்கூடும். பிரிந்தவர்கள் வாழ்க்கையில் மீண்டும் இணைவர். குடும்பத்தில் உறவு நெருங்கியதாக இருக்கும், அறவழிகளில் நாட்டம் ஏற்படும்.

**மகரம்-** ஆமைவேகத்தில் காரியங்கள் நடைபெறும். பகைவர்களின் சூழ்ச்சிகள் பலமாக இருக்கும். காணித் தொல்லையினால் கடன்படநேரிடலாம். குடும்பத்தில் இடைக்காலப் பிரிவுக்கும் இடமுண்டு.

**கும்பம்-** பசுமையான சம்பவம் நடைபெறும். களஸ்திரவழியால் நன்மைகள் கிடைக்கும். குடும்பத்தில மகிழ்ச்சிகரமான சூழ்நிலை தென்படும். காதல்வானில் சஞ்சரிப்பவர்களுக்கு கனிவான நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

**மீனம்-** அடுத்துக் கெடுப்பதற்கு எதிரிகள் முனைவர். சிலர் வாழ்க்கையில் பொருள்முடையும் ஏற்படலாம். நண்பர்களால் தொல்லைகள் தோன்றக்கூடும். திட்டமிட்டுச் செயலாற்றவும்.


(தினசரி 5 காட்சிகள்) நடித்த

# மஞ்சள் குங்குமம்

ராஜா (யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்

சிவாஜி - ஜி. வரலக்ஷ்மி
நம்பியார் - தங்கவேலு
நடித்த

# ஹரிச்சந்திரா

# வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன்-ஏ.வி.எம்.ராஜன்
விஜயநிர்மலா-நாகேஷ்-எம்.ஆர்.ஆர்.வாசு
நடித்த

# பந்தயம்

பாடல்கள்: கண்ணதாசன்
இசை: கே வி மகாதேவன்

வெற்றிகரமான 2 வது மாதம்
கெப்பிட்டல்
(கொழும்பு)

# வெலிங்டன் யாழ்ப்பாணம்

தினசரி பி ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி

1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய
ஜனாதிபதியின் பிராந்தியப் பரிசு பெற்ற
வெற்றிச்சித்திரம்





# சிவாஜிகணேசன் - பத்மினி

பாலையா
நாகேஷ்
நம்பியார்
ஏ.வி.எம். ராஜன்
மனோரமா
மற்றும்பலர் நடித்த



சிவாஜிகணேசன் அளிக்கும்

# தில்லானா மோகனாம்பாள்

A.P.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்குவங்காளத்தில் ஜனதிபதி ஆட்சி பிரகடனம்

## அரசாங்கம் அமைக்கும் தகுதி எந்த ஒரு கட்சிக்கும் இல்லை

### கவர்னர் சிபார்சின் மீது ராஷ்டிரபதி நடவடிக்கை

புதுடில்லி, மார்ச் 20

**மேற்குவங்காள ராஜ்யத்தில் ஜனதிபதி ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டு சட்டசபை கலைக்கப்பட்டு விட்டது.**

**மேற்கு வங்காளத்தில் நிலையான அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு எந்தக் கட்சியினாலும் முடியாது என்று கவர்னர் அறிவித்ததைத் தொடர்ந்து ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.**

மேற்குவங்கத்தில் ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப் படுத்தப்பட்டதை இந்தியாவிலுள்ள அரசியல் கட்சிகள் பலவும் பொதுவாக வரவேற்றுள்ளன. ராஷ்டிரபதி ஆட்சி துரதிருஷ்டமானது என்றாலும் வேறுவழியில்லை என்று பலகட்சித் தலைவர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள். இதுவரை காலமும் மேற்கு வங்காளத்தில் இடம் பெற்று வந்த வன்முறைகள் யாவும் இனியாவது ஓயும் என்று சிலர் நம்பிக்கை தெரிவித்தார்கள்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட்களின் போக்குத்தான் ஜனதிபதி ஆட்சி ஏற்பட்டதற்கு காரணம் என்று பங்களா காங்கிரஸ் தலைவர் திரு. அஜோய்குமார் முகர்ஜி கூறினார்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி தனது எதிரிகளை ஒழித்து விட்டு தான்மட்டும் அதிகாரத்தில் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கடைப்பிடித்த ஒரு சார்பு கொள்கையின் விளைவுதான் இது என்று பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர்கள் கூறினார்கள்.

சுதந்திரா கட்சித் தலைவர் திரு மஸானி கருத்து வெளியிடுகையில் மேற்கு வங்காளத்தில் ராஷ்டிரபதி ஆட்சி ஏற்பட்டது குறித்து தாம் மகிழ்ச்சியடைவதாகக் குறிப்பிட்டார். மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியையும் நக்ஸல் பாரிகளையும் தடை செய்ய வேண்டும் என்று அவர் வற்புறுத்தினார்.

மேற்கு வங்காளத்தில் கூட்டணி ஆட்சியில் அங்கம் [illegible]

...ளன்று பதவியிலிருந்து விலகிக் கொண்டார், அதன் பிறகு மார்க்ஸிஸ்ட் கட்சியினர் மாற்று அமைச்சு ஏற்படுத்துவதற்கு போதிய பெரும்பான்மைப்பலம் இருப்பதாக நிரூபிக்கும்படி மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியைக் கவர்னர் கேட்டிருந்தார். மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவு கொடுப்பதில்லையென்று மற்ற ஒன்பது கட்சிகள் முடிவு செய்து தமது முடிவை கவர்னருக்கும் அறிவித்தன இதனால் அரசியல் சாஸனத்தின் ஷரத்துக்களுக்கமைய நிலையான அரசொன்றை அமைக்கும் தகுதி எந்த ஒரு கட்சிக்கும் இல்லையென்று கவர்னர் மத்திய அரசுக்கு அறிவித்தார். இதைத் தொடர்ந்து மேற்கு வங்காளத்தின் ஆட்சிபொறுப்பை ராஷ்டிரபதி தமது பொறுப்பில் எடுத்துக் கொண்டு விட்டார்.

ராஷ்டிரபதி ஆட்சிப் பிரகடனப்படுத்தப் பட்டதைத் தொடர்ந்து மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு ஜோதிபாசு கருத்து வெளியிடுகையில் இது விரைவில் பொதுத்தேர்தல் நடைபெறுவதற்கு ஆயத்தம் செய்வதற்கு வசதியளிப்பதாய் இக்கவேண்டும் என்றார்.

கடந்த சில தினங்களாக மேற்குவங்காளத்தில் நடைபெற்று வரும் கலவரங்கள் இன்னும் ஓயவில்லை. நேற்று பல இடங்களில் மோதல்கள் இடம்பெற்றன. பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெற்றது. இதுவரை இறந்தவர்களின் தொகை 35க்கு மேல் இருக்கவேண்டு

## இன்று லெனின் நூற்றாண்டு விழா

யாழ்ப்பாணம், சனி

இலங்கை சோவியத் நட்புறவுச் சங்க ஆதரவில் மாமேதை லெனின் நூற்றாண்டு விழா இன்று மாலை திரு த. சி. ஆனந்தகுமாரசாமி சங்கத்தலைவர் தலைமையில் நல்லூர் மேற்கு வீதியில் நடைபெறவிருக்கிறது

கலாநிதி திரு ஜே எம் வினிக். திரு வி தர்மலிங்கம் எம் பி, திரு வ பொன்னம்பலம் (இ சோ ந சங்ககிளைச் செயலாளர்), திரு வ சச்சிதானந்தம் திரு ஆ துரைராஜசிங்கம் (யாழ் துணை முதல்வர்) ஆகியோர் உட்படப் பலர் சிறப்புரையாற்றுவார்கள் வில்லுப்பாட்டு, நாடகச் வாணவேடிக்கை முதலிய நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## திருப்பாடுகளின் காட்சி

முசலி, வெள்ளி

பேசாலைக் கிராமத்தில் யேசு கிறிஸ்து நாதரின் திருப்பாடுகள் காட்சிகள் நடைபெறுகின்றன. இக்காட்சிகள் பழைய முறையைத்தழுவி மரங்களினுல் செதுக்கப்பட்ட சிலைகளால் காண்பிக்கப்படுகின்றன. இக்காட்சியை ஒழுங்குபடுத்துவதற்கு பேசாலைக்கட்டளைக் குரவர் முயற்சிசெய்திருந்தார் இக்காட்சி இன்று முடிவடையும்.

## மகளிர்

சீர்காழி கோவிந்தராஜனின்

## தமிழ் பாட்டுக்கு கன்னடர் எதிர்ப்பு

பெங்களூர், மார்ச் 20

பெங்களூர் சிவாஜி நகர் மைதானத்தில், பெங்களூர் கிரிக்கெட் கழகத்தின் சார்பில் நடைபெற்ற பாட்டுக் கச்சேரியில் சீர்காழி கோவிந்தராசன் தமிழ்பாட்டினைப் பாடியபோது கன்னடர்கள் கூச்சல்போட்டு, ஆர்ப்பாட்டம் செய்தனர்.

"தமிழ்ப் பாட்டுப் பாடாதே, கன்னடப்பாட்டுப்பாடு" என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் கூச்சலிட்டனர். சீர்காழி கோவிந்தராசன் கன்னடப்பாட்டுகளைப்பாடினார். அப்போதுப் கன்னடர்கள் கூச்சலிட்டனர். இதனால் அவர் ஆத்திரமடைந்து தொடர்ந்து பாடாமல் போய்விட்டார்

முன்பொருமுறையும் எம். எஸ். சுப்புலக்ஷ்மியின் பாட்டுக் கச்சேரியின் போது கன்னடர்கள் ஆர்ப்பாட்டம் செய்தது தெரிந்ததே.

## "தேசிய இளைஞர் சேவையில் சேர்ந்து பணியாற்றுங்கள்"

### தமிழ் இளைஞர்களுக்கு திரு ஸ்ரீகாந்தா அழைப்பு

கோப்பாய், வெள்ளி

"எமது தமிழினத்தைச் சூழ்ந்துள்ள மிகவும் நெருக்கடிப் பிரச்னைகளான உத்தியோகப் பிரச்னை பொருளாதாரப்பிரச்னைகள் யாவும் நம் இளைஞர் சமுதாயத்தின் மனமாற்றம் மூலம் ஓரளவு தீரக்கூடுமென நம்புகிறேன் தற்கால இளைஞர் சமுதாயம் அரசாங்க உத்தியோகத்தை மாத்திரம் நம்பியிராது கமத்தொழிலையும் கைத்தொழிலையும் முன்னேற்றுவது தமக்கும் நாட்டுக்கும் நன்மைசெய்வதுடன் அமையாது வருடகாலத்துக்கு அவை மிகவும் பயன்தரக்கூடியவையாகவுமிருக்கும்"

மேற்கண்டவாறு அச்செழு கிராமமின் திட்டத்தை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் காணி நீர்ப்பாசன அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. எம். ஸ்ரீகாந்தா கூறினார்.

கோப்பாய் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. சி. கதிரவேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற பகிரங்க கூட்டத்தில் திரு ஸ்ரீகாந்தா மேலும் [illegible] யில்,

தற்கால இளைஞர் சமுதாயத்தின் நிலைகுறித்துத்தாம் கவலையடைவதாகவும், எமது நிலையை நாம் நன்கு சிந்தித்து தற்பொழுது அமைக்கப்பட்டு வரும் தேசிய இளைஞர் சேவையில் சேர்ந்து பணியாற்ற வாலிபர்கள் முன்வரவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

தலைவர் தமது தலைமையுரையில் கூறியதாவது: இலங்கை அரசாங்கத்தின் கிராம மின்சாரத்திட்டத்தின்படி கோப்பாய்த் தொகுதியிலுள்ள இக்கிராமத்துக்கு முதலாவதாக மின்சக்தி வழங்கப்படுவது மகிழ்ச்சிக்குரியது. நமது வாழ்க்கையில் மட்டுமன்றி நாட்டின் பொருளாதார முன்னேற்றம் தொழில் முன்னேற்றம் ஆகியவற்றுக்கும் இம்மின் திட்டம் அத்தியாவசியமாகப்பயன்படும். அதனை நல்ல முறையில்பயன்படுத்த வேண்டும்"

வலி கிழக்கு காரியாதிகாரி திரு வி. கந்தப்பிள்ளை, கிளிநொச்சி காரியாதிகாரி திரு கே. யோகநாதன் உட்படப் பலர் பேசினர்:

[illegible] சு. ப. வடிவேலு குழுவினரின் மெல்லிசை நடைபெற்றது.

கம்போடியாவின்

## நடுநிலைமை கொள்கையில் மாற்றம் இல்லையாம்

நாம்பென், மார்ச் 20

கம்போடியாவில் அதிபர் பதவியிலிருந்து இளவரசர் நொரடொம் சிஹானுக் விலக்கப்பட்டு விட்டபோதிலும் நாட்டின் நடுநிலைமைக் கொள்கையில் மாற்றம் இருக்காதென்று புதிய அரசாங்கம் அறிவித்திருக்கின்றது.

### யு. எஸ் அங்கீகாரம்

கம்போடியாவில் ஏற்பட்டுள்ள புதிய அரசாங்கத்தை அமெரிக்கா தொடர்ந்து அங்கீகரித்துவரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சில அரசியல் காரணங்களை முன்னிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகக் கூறப்பட்டது.

கம்போடியாவில் ஏற்பட்டுள்ள நிலைமைகளின் காரணமாகத் தென்வியட்னாமிலிருந்து 50 ஆயிரம் துருப்புகளை விலக்கிக்கொள்ளும் அமெரிக்கத் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படாது என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் திரு. வில்லியம் ரோஜர்ஸ் அறிவித்திருக்கிறார்.

கம்போடியாவில் புரட்சி அரசாங்கம் ஏற்பட்டதைத் தொடர்ந்து துண்டிக்கப்பட்டிருந்த வெளிநாடுகளுடனான போக்குவரத்து, டெலிபோன், ரேடியோத் தொடர்புகள் மீண்டும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

### பிரிட்டன் அங்கீகரிக்காது

புதிய கம்போடிய அரசை அங்கீகரிக்கப் போவதில்லை என்று பிரிட்டன் அறிவித்திருக்கிறது. கம்போடியாவில் அதிபர் சிஹானுக்கை பதவியிலிருந்து நீக்கிவிட்டு புதிதாகப் பதவிக்கு வந்துள்ள அரசு, தனது கொள்கைகள் பற்றித் தெளிவாக அறிவிக்காதவரையில் அங்கீகரிக்க முடியாதென்று பிரிட்டன் அறிவித்திருக்கின்றது

### பீகிங்கில் சிஹானுக்

பதவி நீக்கஞ்செய்யப்பட்ட அதிபர் சிஹானுக் மாஸ்கோவிலிருந்து பீகிங் சென்றடைந்துள்ளார். அவரை விமான நிலையத்தில் பிரதமர் சூ-என்-லாயும், பிரமுகர்களும் வரவேற்றனர். நேற்று இளவரசர் சிஹானுக்குடன் சூ-என்-லாய் பேச்சுவார்த்தைகள் நடத்தினர்.

கிழக்கு மாகாணத்தில்

## யு.என்.பி. யுடன் காங்கிரஸ் போட்டியிடாதாம்

### 12 தொகுதிகளுக்கு அபேட்சகர் தெரிவு

யாழ்ப்பாணம், சனி

வடமாகாணத்தில் எல்லாத் தொகுதிகளுக்கும் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர்கள் தெரிவுசெய்யப்பட்டு விட்டதாக குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் பட்டிருப்பு பொத்துவில் ஆகிய தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர்களை நிறுத்தினுல் அங்கு தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர்களை நிறுத்தாதென்றும் கிழக்கு மாகாணத்தில் மற்றும் தொகுதிகளில் ஐக்கிய தேசியக் கட்சி அபேட்சகர்களை தமிழ் காங்கிரஸ் ஆதரிக்குமென்றும் அவர் கூறினார்

வடபகுதியிலுள்ள தொகுதிகளுக்குக்கீழ்க்காணுவோர் தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர்களாகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பதாகவும் குழு உறுப்பினர் கூறினார்:-

யாழ்பாணம்: திரு. ஜி ஜி. பொன்னம்பலம், உடுப்பிட்டி திரு. எம். சிவசிதம்பரம், வவுனியா: திரு. ரி. சிவசிதம்பரம், சாவகச்சேரி திரு. வி. குமாரசாமி, ஊர்காவற்றுறை திரு. என். ரி. சிவஞானம், நல்லூர்: திரு. சி அருளம்பலம, வட்டுக்கோட்டை: திரு. சி. தியாகராசா, காங்கேசன்துறை: திரு. ரீ. திருநாவுக்கரசு. பருத்தித்துறை திரு. என் நடராசா, கிளிநொச்சி: திரு வி ஆனந்தசங்கரி, கோப்பாய், திரு. கே, குணரத்தினம், உடுவில் திரு. ந சிவநேசன்,

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் தலைமையில் நேற்று நடைபெற்ற அபேட்சகர் தெரிவுக் குழுக் கூட்டத்தில் பொத்துவில், பட்டிருப்பு தொகுதிகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது. மீண்டும் கூடி இவ்விரு தொகுதிகள் பற்றி ஆலோசிப்பதென முடிவுசெய்யப்பட்டது

## சிறந்த சேவையால் பதவி உயர்வு

யாழ்ப்பாணம், சனி

இரணைமடு விசேட திட்ட அதிபராகக் கடமையாற்றும் திரு சிவமுத்துலிங்கம் அரசாங்கசேவை ஆணைக்குழுவினரால் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லில் கட்சியையும் நக்ஸல் பாரிகளையும் தடை செய்ய வேண்டும் என்று அவர் வற்புறுத்தினர்.

மேற்கு வங்காளத்தில் கூட்டணி ஆட்சியில் அங்கம் வகித்த கட்சிகளில் ஒன்றான பங்களா காங்கிரஸ் விலகிக் கொண்டதில் அங்குஸ்திரமான ஆட்சி ஏற்படுவது சாத்தியமில்லாமல் போயிற்று. பங்களா காங்கிரஸ் கட்சியின் தலைவரும் முதலமைச்சருமான திரு அஜோய் குமார் முகர்ஜி கடந்த திங்க

இன்னும் ஓயவில்லை. நேற்று பல யூடங்களில் மோதல்கள் இடம் பெற்றன. பொலிஸ் துப்பாக்கிப் பிரயோகமும் இடம் பெற்றது. இதுவரை இறந்தவர்களின் தொகை 35க்கு மேல் இருக்கவேண்டுமெனக்கருதப் படுகின்றது. குறைந்தது 150 பேராவது காயமடைந்திருக்கிறார்கள். ராஷ்டிரபதி ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டு விட்டதால் இனிமேல் கலவரங்கள் ஒடுக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெர்மன் தலைவர்கள் பேச்சில்

# குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இல்லை?

பொன், மார்ச் 20

மேற்கு ஜெர்மன் பிரதமர் வில்லிபிரான்டும் கிழக்கு ஜெர்மன் பிரதமர் ஹோர்ஸ்டொஃப்பும் நேற்று நடத்திய பேச்சுவார்த்தைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டதாகத்தெரியவில்லை.

பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்துவதென்று முடிவுசெய்யப்பட்டிருப்பது மட்டுமே ஏற்பட்டிருக்கும் புதியமாற்றம் என்று கருதப்படுகின்றது.

அடுத்த மே மாதம் 21-ம் திகதி இருதலைவர்களும் மேற்கு ஜெர்மனியில் கூடிப் பேசுவதென்று முடிவுசெய்துள்ளனர்.

கிழக்கு ஜெர்மனியை சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கவேண்டும் என்று ஹோர்ஸ்டொஃப் கோரியதாகவும் இதை வில்லிபிரான்ட் ஏற்றுக்கொள்ளவில்லையென்றும் தெரிகின்றது.

பேச்சுவார்த்தைகளின் பின்னர் வில்லிபிரான்ட் மேற்கு ஜெர்மனிக்குத் திரும்பிவிட்டார்.

# ஜனநாயகப் பண்பும் தமிழ்நாடு சட்டசபையும்

## நெடுஞ் செழியன் பெருமிதம்

சென்னை, மார்ச் 20

பதவிக்காலத்தில் மரணமடையும் சட்டசபை உறுப்பினர்களின் குடும்பங்களுக்கு அந்த உறுப்பினர்களின் பதவிக்காலம் முடியும்வரை உதவிப்பணம் வழங்கப்படும் என்று அமைச்சர் நெடுஞ்செழியன் அறிவித்துள்ளார்.

"ஜனநாயக பண்பை தொடர்ந்து காப்பாற்றி வரும் இடத்தில் முதன்மையாக இந்த அவை இருந்து வருகிறது. இந்தமன்றத்தில் நாம் உறுப்பினர்களாக இருப்பது கண்டுமகிழ்வடைகிறேன். சமீப காலங்களில் மற்ற மாநில அவைகளில் நடைபெறும் சம்பவங்களோடு நமது அவையை ஒப்பிட்டுப்பார்த்தால் நாம் பெருமையடையலாம்."

தமிழ்நாடு சட்ட சபையில் சட்டமன்றத்துறை மாநிலக் கோரிக்கைமீது நடந்த விவாதத்துக்கு பதிலளித்து பேசுகையில், நெடுஞ்செழியன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## சேவைநலம் பாராட்டுவிழா

பருத்தித்துறை, சனி

உபசபாநாயகர் திரு. மு சிவசிதம்பரத்தின் சேவையினைபாராட்டுமுகமாக இம் மாதம் 22-ம் திகதி மாலை கரணவாயில் ஒரு பொதுக் கூட்டம் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளது.

ஸ்ரீலஸ்ரீ ச. செவ்வந்திநாதக் குருக்கள் தலைமையில் நடக்கவிருக்கும் இக்கூட்டத்தில் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் வவனியா எம்.பி. திரு தா. சிவசிதம்பரம் உட்படப் பலர் பாராட்டுரைகள் வழங்கவிருப்பதாகத் தெரிகிறது.

ளைக் குரவர் முயற்சிசெய்திருந்தார் இக்காட்சிஇன்று முடிவடையும்.

## மகஜர்

கைதடி, வெள்ளி

கைதடியிலுள்ள சிறுபான்மைத் தமிழர்களுக்கென குடியேற்ற வீடுகள் அமைத்துத் தரும்படி கைதடி 'நேவவத்தை' சேவா மன்றத்தினர் உள்ளூராட்சி அமைச்சரை மகஜர்மூலம் கேட்டுள்ளனர்.

தங்கள் சமூகத்தில் ஒருவரை சமாதான நீதவானாக நியமித்துக் தரும்படி கோரும் மகஜர் ஒன்றையும் நீதி அமைச்சர் திரு. ஏ எவ். விஜயமானுக்கு அனுப்பியுள்ளனர்.

## அதிருப்தி

பருத்தித்துறை, சனி

பருத்தித்துறை கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகாவில் சில அத்தியாவசியப் பொருட்கள் கிடைப்பதில்லையென பொதுமக்கள் அதிருப்தியடைவதாகத் தெரிகிறது அங்கு கிடைக்காத பொருட்களைத் தனிப்பட்டவர்களின் கடைகளில் கூடிய விலைகொடுத்து வாங்கவேண்டியிருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர் இது சம்பந்தமாக மேலதிகாரிகளுக்கு புகார் செய்யப்படவிருப்பதாகவும் தெரிகிறது.

## உள வளாச்சிக்கு அவசியமானது

பருத்தித்துறை, சனி

'மாணவரின் உளவளர்ச்சிக்கு விளையாட்டு மிகஅவசியம் என்பதை பலநாட்டுக் கல்விமான்களும் ஏற்றுக் கொண்டனர். சமுதாயத்திற்கு அவசியமான சமத்துவ சகோதர உணர்ச்சிகளை வளர்த்து நாட்டில் ஒற்றுமையை நிலைநாட்டவும் விளையாட்டுக்கள் உதவும்.' இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற கனிஷ்ட வித்தியாலயங்களுக்கான விளையாட்டுப் போட்டி வைபவத்திற்குத் தலைமைதாங்கிப் பேசிய வரணி மகாவித்தியாலய அதிபர் திரு வி. தங்கராசா கூறினார்.

17 பாடசாலைகள் பங்கு பற்றிய இப் போட்டியை வட்டாரக் கல்வி அதிகாரி திரு வி கந்தசாமி ஆரம்பித்து வைத்தார் போட்டிகள் வரணி மகாவித்தியாலய மைதானத்தில் நடந்தன.

வேலுப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற பகிரங்க கூட்டத்தில் திரு ஸ்ரீகாந்தா மேலும் மேலும் பேசுகையில்,

தற்கால இளைஞர் சமுதா

நொச்சி காரியாதிகாரி தி. கே. யோகநாதன் உட்பட பலர் பேசினர்:

கலைமணி சுப. வடிவேலு குழுவினரின் மெல்லிசை நடைபெற்றது.

ராஜாங்க அமைச்சர் சொல்கிறார்:

# 'சேர் இராமநாதனுக்கும் எனது குடும்பத்துக்கும் நீண்டகாலஉறவுஉண்டு'

மல்லாகம், வெள்ளி

'சேர் பொன் இராமநாதன் குடும்பத்திற்கும் எனது குடும்பத்திற்குமிடையில்பல ஆண்டு காலமாக தொடர்பும், உறவும், இணைப்பும் இருந்து வருகிறது. இவ்விதமான தொடர்பு நாட்டிலுள்ள சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் நிலவினால் தேசம் முன்னேறபெறும் உதவியாக இருக்கும்'

ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன சுன்னாகம்இசைக் கல்லூரியில் இன்று பேசுகையில் குறிப்பிட்டார்.

'சங்கீதரத்தினம்' பட்டப் பரீட்சையில் சித்திபெற்ற பதினைந்து மாணவர்களுக்கு பாராட்டுப்பத்திரங்களை வழங்கினார்'

அமைச்சர்மேலும் சொன்னார்:-

'1906ம் ஆண்டு சேர் பொன் இராமநாதன் அவர்கள் இந்தியா சென்றுவிட்டார்கள். இந்நேரத்தில், எனது தந்தையின்சகோதரர் அவரை இந்தியா விலிருந்து அழைத்துவந்து1911ல்சட்டநிருபணசபையில் அங்கத்தவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட முன்னின்று உதவிபுரிந்தார் இசைத் துறை வாழ்க்கைக்கு மகிழ்ச்சியை, இன்பத்தைவழங்குவதோடு சமுதாய பாரம்பரிய உயர்ச்சிக்கு உறுதுணையாக விளங்குகிறது. இக்கல்லூரியின் பரீட்சையை கல்வி அமைச்சு அங்கீகரிக்கவேண்டிய நடவடிக்கை எடுக்கும்.

வழக்கறிஞர் எஸ் ஆர் கனகநாயகம் இவ்வைபவத்திற்குத் தலைமைதாங்கினார்

# "தெய்வத் திருமுறைகளைப் புறக்கணிக்கின்றேமே"

சுழிபுரம், வெள்ளி

"அயலவன் எமது மொழியைப் பறித்துவிட்டான் என அவலக்குரல் எழுப்பும் நாம் அதே வேளையில் எமது தெய்வத்தமிழ் திருமுறைகளுக்கு தக்கஇடம் கொடுக்காமல் புறக்கணித்து வருகிறோம் கோவில்களில் நடைபெறும் பூசை. கிரிகைகள், வழிபாட்டின்போதும், கூட்டுப் பிரார்த்தனையின்போதும், தெய்வத்தமிழ் புறக்கணிக்கப்படுகின்றன. எமக்குதெரியாத புரியாதவேற்றுமொழிகளில் பூசை, கிரிகைகள் நடைபெறுவது தவிர்க்கப் படவேண்டும். நால்வர்களின் நல்லமுதான திருமுறைகள் இருந்தும் பக்திப் பாடல்களான புதிய பாடல்கள் கூட்டுப்பிரார்த்தனையின்போது படிக்கப்படுகின்றன"

இவ்வாறு பண்ணாகம் விசவத்தனை முருகப் பெருமான் நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய முதலியார் செ. சின்னத்தம்பி கூறினார்.

திரு. சின்னத்தம்பி மேலும் பேசுகையில், கோவிலில் பஞ்சாலாத்தி காட்டினால் பூசைகள் முடிவடைந்தன என்பதுதான் அர்த்தமாகும் ஆனால் எமது நாட்டில் பஞ்சாலாத்தி காட்டிய பின்னர் தேவாரம் படிக்கப்படும் வழக்கம் இருந்துவருகிறது இதுபற்றி நாம் சிந்திக்க வேண்டும் என்றும் கூறினார்

## குருநகரில் மீன்பிடி துறைமுகம்

மல்லாகம் வெள்ளி

குருநகரில் மீன்பிடி துறைமுகம் அமைக்க விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் தற்போது படகுகள் விடப்படும் இடத்தை மூடி விடுவது பற்றி மீனவர் கவலையடையவேண்டாம்'

இவ்வாறு ராஜாங்க மந்திரி திரு ஜே: ஆர். ஜெயவர்த்தன குருநகரில் யாழ்ப்பணம் எம். பி திரு ஜி ஜி பொன்னம்பலத்தின் கோரிக்கைக்கு பதிலளித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

இரணைமடு விசேட திட்ட அதிபராகக் கடமையாற்றும் திரு சிவமுத்துலிங்கம் அரசாங்கசேவை ஆணைக் குழுவினரால் பதவி உயர்வு பெற்றுள்ளார்,

இலங்கை விவசாய போதனாசிரியராகவும் அரசாங்க பண்ணை முகாமையாளராகவும் கடமையாற்றிய இவர் வவனியா மாவட்ட முன்னாள் போதனாசிரியராவர்.

0 0

யாழ் விவசாயவிஸ்தரிப்பு நிலைய தலைமைப்பீட போதனாசிரியர் திரு ரி, என். மாணிக்கவாசகர் பதவி உயர்வு பெற்றுள்ளார். மாஎலுப்பள்ளம் பேராதனை முதலிய விவசாய ஆராய்ச்சி நிலையங்களில் சிறு யந்திரங்களை பரிசோதித்து நவீன யந்திரங்களை ஆக்கியும் விவசாயிகளுக்கு இலகுமுறை பயிர் செய்யவும் உதவியதற்காக இவருக்கு பொதுச் சேவைக் கமிஷன் பதவி உயர்வு அளித்துள்ளது.

நிரை விதைப்பு சால் அழிப்பு என்பனவற்றை யாழ்ப்பாண விவசாயிகளிடம் புகுத்துவதற்கு உதவியளித்த இவர் சிறு கையந்திரம் பற்றிய துறையில் 6 மாதகாலம் ஜப்பானில் பயிற்சி பெற்றவர்.

(கு. வி. ம)

0 0

பொது அரசாங்க சேவை உத்தியோகத்தர் மேல் பதவிக்கு யாழ் மாவட்ட விவசாய விஸ்தரிப்பு நிலைய போதனாசிரியர் திரு எஸ். தவராசா நியமிக்கப்பட்டுள்ளார்,

நாலு வருடங்கள் உருளைக்கிழங்கு உற்பத்தியில் மிதமான அக்கறை காட்டி சுமார் 1300 ஏக்கர்வரை உருளைக்கிழங்கு உற்பத்தி செய்ய காரணகர்த்தாவாக இருந்ததற்காக பொதுச் சேவை கமிஷன் இவருக்கு பதவி உயர்வு வழங்கியுள்ளது ......

கைலாயபிள்ளையார்

## புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் ஸ்ரீகைலாசநாதர் பிள்ளையார் கோவில், புனராவர்த்தன மகாகும்பாபிஷேகம், இம் மாதம் 23ம் தேதி பகல் நடைபெற விருக்கிறது. இதற்கான பூர்வாங்க கிரியைகள் இம் மாதம் 19ம் திகதி முதல் ஆரம்பமாகியுள்ளன.

35 குருமார்களால் நடாத்தி வைக்கப்படும் மேற்படி ஆலய கும்பாபிஷேகத்தில் ஸ்ரீ பஞ்சமுகவிநாயகப் பெருமானுக்கு நூதனப் பிரதிஷ்டையும் நடைபெறும்.

உறுப்பினர் கூறினர்:-

யாழ்ப்பாணம்: திரு. ஜி ஜி. பொன்னம்பலம், உடுப்பிட்டி திரு. எம். சிவசிதம்பரம், வவனியா: திரு. ரி. சிவசிதம்பரம், சாவகச்சேரி திரு. வி. குமாரசாமி, ஊர்

பொத்துவில், பட்டிருப்பு தொகுதிகள் பற்றி ஆலோசிக்கப்பட்டது. மீண்டும் கூடி இவ்விரு தொகுதிகள் பற்றி ஆலோசிப்பதென முடிவுசெய்யப்பட்டது

# "தேவாரம்பாட கூலிக்கு ஆள்பிடிக்கும் நிலை"

## இந்துமாமன்றஆரம்பவிழாவில்கவலை

பருத்தித்துறை, வெள்ளி

'இந்துமதமும் தமிழும், கலாச்சாரமும் எமது மக்களின் வாழ்வுடன் ஒன்றிப் பிணைந்துள்ளவை. இந் நிலையில் ஒரு சமய விழாவுக்குத் தேவாரம் பாடுவதற்குக் கூலிக்கு ஆள் பிடிக்கும் நிலை ஏற்பட்டுள்ளமை வருந்தத்தக்கது'.

இவ்வாறு நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு க சிவசிதம்பரம் நேற்றுமாலை மேற்படி வித்தியாலயத்தில் நடைபெற்ற இந்து மாமன்ற அங்குரார்ப்பண விழாவிற்குத் தலைமை தாங்கி ஆற்றிய உரையிற் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசும்போது, 'சைவம் வெறும் மதம் மட்டுமன்றி, ஒரு வாழ்க்கை முறையுமாகும். மதவிதிகளை அனுட்டித்து வருவதால் தனிப்பட்டவரின் வாழ்க்கை மட்டுமன்றி, சமுதாய ஒழுக்கமும் வளர்ச்சியடைய முடியும். நாட்டில் ஒழுங்கும் அமைதியும் நிலவும். எனவே மத அடிப்படையில் வாழ்க்கை அமைந்தால் மட்டுமே சமுதாயத்தைப் பீடித்துள்ள சாபக்கேடுகள் மறைய வழிபிறக்கும்'.

# "பதவிக்காக ஒருபோதும் அரசுடன் சேரவில்லை"

— கோப்பாய் எம். பி.

உடுப்பிட்டி வெள்ளி

"தமிழரசுக்கட்சி பலஇன்னல்கள், கஷ்டங்களுக்கு இடையே தியாகங்கள் மூலமே முன்னேறியது. தமிழ்மக்களின் உரிமைகளைப் பாதுகாத்து எதிர்காலத்தில் இந்நாட்டில் தமிழினம் சமஷ்டி அந்தஸ்துபெறுவதே எமது நோக்கமாகும்"

இவ்வாறு உடுப்பிட்டித் தொகுதித் தமிழரசுக்கட்சி அபேட்சகர் திரு க. ஜெயக்கொடி துன்னாலையில் தமிழரசு வாலிபமுன்னணியை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் கூறினார்'

திரு: கே. இரத்தினகோபால் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. கோப்பாய் எம். பி சி. கதிரவேற்பிள்ளை பேசுகையில் கூறியதாவது:-

நாம் பதவிகளுக்காக அரசாங்கத்துடன் ஒரு போதும் சேரவில்லை. திருமலை சைவமதத் தவர்களின் புனிதஸ்தலம் தமிழர்களின் பாரம்பரிய கலாச்சாரம் வாய்ந்த இடம் திருமலை. இங்கே அரசாங்கம் கைவைத்ததை நாம் கடுமையாக எதிர்த்தோம்.

தமிழரசுக்கட்சியைக் கத்தோலிக்க கட்சி எனக் கூறுகின்றனர். ஆனால், திருமலை விடயத்தில் அரசாங்கத்திலிருந்து வெளியேறியது கத்தோலிக்க கட்சி என்று எதிர்க்கட்சியினரால் கூறப்படும் தமிழரசுக்கட்சிதான்.

வாலிபமுன்னணி உறுப்பினர்களாகப்பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு கே. இரத்தினகோபால், உபதலைவர்: திரு ம சோமசுந்தரம், செயலாளர்: மு ஸ்ரீஸ்கந்தராசா, உப செயலாளர்: ச அ. செல்வேந்திரன், தனாதிகாரி க. சின்னையா.

ஐவருடங்கிய நிர்வாக சபை யொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## 3 பிரிவாகியது

வேலணை வெள்ளி

சுருவில், வேலணைமேற்கு, புளியங்கூடல்சரவணை, நாரந்தனை ஆகிய பகுதிகள் இதுவரை காலமும் இரு கிராமசேவையாளர்கள் பகுதியாக இருந்துவந்தன இப்பகுதிகள் மூன்று கிராமசேவையாளர் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

சுருவில், வேலணைமேற்கு, சரவணை ஆகியகிராமசேவையாளர் பிரிவுகளாக இவை மாற்றப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கண்டுபிடிக்கப்பட்டதும் திருடன் ஓடிப்போய் விடுகிறுன். அதுபோல மாயையின் சுபாவம் இன்னதென்று நீ ஆய்ந்து கண்டுபிடித்துவிட்டால் அது உன்னிடமிருந்து ஓடிப்போய்விடும்.

— ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 389.

யாழ்ப்பாணம் சௌமிய வருஷம் மாசிமாதம் 8-ந் திகதி (21-3-70)


## சிங்கள மொழிப் பரீட்சை

அரசாங்க ஊழியர்களுக்கான சிங்களமொழிப் பரீட்சை இவ்வாரம் பல இடங்களிலும் நடைபெறுகின்றது. இந்தப் பரீட்சையை வரவரக் கடினமாக்கிவிட்டதாகவும், சிங்கள மாணவர்களும்கூட சித்தியடைய முடியாத அளவுக்குக் கேள்விகளைக் கடுமையாக்கியுள்ளதாகவும் பள்ளிக்கூடத்திலே சிங்களம் படிக்காத தமிழ் அரசாங்க ஊழியர் இதில் தேறுவது முடியாத காரியமென்றும், இப் பரீட்சையை இலகுவாக்கவேண்டுமென்றும், தமிழ்அரசாங்க ஊழியர் சிலர், கல்விஅமைச்சுக்கு செய்துகொண்டுள்ள ஒரு விண்ணப்பம் மிக மிக மிதமானது.

சிங்களமும் தமிழும் அரசாங்கமொழிகளாக இருந்து வந்ததைத் திடீரென மாற்றி சிங்களம் மட்டும் சட்டத்தை ஒருதலைப்பட்சமாக நிறைவேற்றியது இந்த நாட்டில் வசிக்கும் தமிழர்களுக்குச் செய்த பெரிய கொடுமையும் அநீதியுமாகும். அச் சட்டம் நிறைவேறுமுன்பு, அரசாங்க ஊழியர் அனைவரும் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய இம் மூன்று மொழிகளிலும் பயிற்சிபெற்றிருக்க வேண்டிவரும். நாட்டிலே ஒரு முக்கிய சமூகமாக வாழும் தமிழ்பேசும் மக்களை அரசியல் சட்டத்தின் 29 வது விதிக்கு மாருக இதன் மூலம் வேற்றுமைப்படுத்திவிட்டனர் இது சட்ட விரோதம். நீதிமன்றத்தில் வழக்காடினுல், இந்தச் சட்டம் உடைபட்டுப்போகும். இதற்கான முயற்சியை தமிழர் யாரும் ஏன இதுவரை எடுக்கவில்லை? இனியாவது எடுப்பார்களா?

அரசாங்க ஊழியர்களுக்கு இந் நாட்டில் வசிக்கும் பொதுமக்களின் இரு முக்கிய மொழிகளும், ஆங்கிலமும் தெரிந்திருக்கவேண்டுமென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அவர்களுக்கு மாகவும், பொதுமக்களின் நன்மைக்கான வழியிலும் நடப்பதாக இருக்கும் தமிழ் ஊழியர் சிங்களம் கற்பதுபோல், சிங்கள ஊழியரும் தமிழ் கற்கவேண்டியிருப்பின், அது சமநீதி வழங்குவதுமாகும். ஐக்கியதேசியக் கட்சி இதுவரை ஏன் தனது அந்தத் தேர்தல்விஞ்ஞாபனத்தின்படி நடக்கத் தவறியது? இனியாவது அதை நிறைவேற்றி வைக்க அது துணிச்சலுடன் முன்வருமா?

இது எப்படியாயினும், இப்போது தமிழ் அரசாங்க ஊழியர் சிங்கள மொழியில் தேர்ச்சிபெற்றால்தான், வேலையில் நீடித்து இருக்க முடியுமென்ற நிர்ப்பந்தநிலை ஏற்பட்டுள்ளது சிங்களத்தைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள், பல வருடகாலம் பள்ளிக்கூடத்தில் பயின்ற ஒரு மொழியை, அரசாங்க கடமைகளைச் செய்துகொண்டே மூன்று வருடங்களில் தமிழ் ஊழியர் கற்றுத் தேறவேண்டுமென்றும் இல்லாவிட்டால் வேலையை இழக்கவேண்டுமென்றும் பிறப்பித்துள்ள உத்தரவு, சம்பந்தப்பட்ட மக்களுக்கும் அவர்களது குடும்பங்களுக்கும் எவ்வளவு பெரிய இம்சை என்பதை விளக்கத்தேவையில்லை. சிங்கள மொழிப் பரீட்சையை வர வர அதிக கடுமையாக்குவது உண்மையாயின் அது, குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் பறித்த கதைபோலாகும்.

இந் நாட்டில் வாழும் தமிழ்பேசும் மக்களுக்கு நீதி வழங்கவேண்டுமென்ற எண்ணம் அரசாங்கத்துக்கு உண்மையில் இருக்குமாயின் தமிழ் அரசாங்க ஊழியரின் மேற்குறித்த மிகமிதமான கோரிக்கைக்கு செவிசாய்த்து இப் பரீட்சையை இயன்றவரை இலகுவாக்குவதுடன், சிங்களம் கற்க அதிக அவகாசம் அளிக்கவேண்டும். இம்முறை பரீட்சை வினாத்

# இன ஒதுக்கலை எதிர்ப்போம்

## இன்று ஐ. நா. பிரகடனம் செய்ததினம்

— 'தேவகாந்தன் —

1960-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் திகதி தென்னுபிரிக்காவின் ஷார்ப்வில்லி என்ற நகரில் வெள்ளையரல்லாதார் எந்நேரமும் 'பாஸ்'களை எடுத்துச் செல்லவேண்டும் என்று அரசாங்கத்தினுல் கொண்டுவரப்பட்ட சட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்திய கறுப்பு இன மக்களில் சுமார் 100 பேர் வரையில் அதே இடத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர். தென்னுபிரிக்காவின் நிறத்துவேஷ பொலிஸாரின் இந்நடவடிக்கையைத் தொடர்ந்து, மார்ச் 21-ம் திகதியை இன ஒதுக்கல் கொள்கையை அகற்றும் தினமாக ஐ. நா. சபை பிரகடனப்படுத்தியது.

ஐ. நா. சபையின் மனித உரிமைகள் சாசனத்துக்கு மதிப்பளிக்கின்ற - மானிடத்தை மதித்து நடக்கின்ற எந்தவொரு ஜனநாயக நாடும் இச்சர்வதேச தினத்தை நினைவுகூரவேண்டியது அவசியத்திலும் அவசியமாகும்.

விஞ்ஞான, பொருளாதார ரீதியில் முழு உலகமும் நெருங்கி இணைந்து வருகின்ற இன்றைய காலகட்டத்தில், இன ஒதுக்கல் கொள்கையானது முழு உலகையும் பாதித்துவிடக்கூடிய அபாய நிலை உருவாகலாம்' இதனுல்தான் ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு. ஊதாண்ட் பின்வருமாறு கூறினுர்.

"இன அடிப்படையில் போராட்டம் நடப்பதை அடக்கி அகற்றிவிட நம்மால் முடியாது போனுல் அதுபேரழிவை விளைவிக்கக்கூடிய ஓர்அசுரனுகவளர்ந்துவிடும்,"

பாதுகாப்புச்சபை 1963 டிசம்பர் 4-ல் நியமித்த நிபுணர் குழுவொன்று, "தென்னுபிரிக்காவில் இன அடிப்படையில் போராட்டம் நிகழுமானல், உலகின் பிறபகுதிகளிலும் இன உறவுமுறைகளை அதுபாதிக்கத்தான் செய்யும். அது பிரமாதமான சர்வதேச விளைவுகளைக் கொண்டதாக இருக்கும். முதல்தரமான உலக அபாயநிலையை அது தோற்றுவித்து விடக்கூடும்" என்று எச்சரித்தது.

எனவே தென்னுபிரிக்காவிலேயே இன ஒதுக்கல் கொள்கை நடைமுறையிலிருந்தாலும் அதுபற்றிக் கவனம் செலுத்தவேண்டியதும், கண்டிக்கவேண்டியது கடமையாகிறது.

### விளைவுகள்:

தென்னுபிரிக்காவில் இன ஒதுக்கல் கொள்கை அமுல்படுத்தப் படுவதால் எழுத்தாளர்களின் சிந்தனைகள் நசுக்கப்படுகின்றன. சுதந்திரத்தை விரும்பும் தென்னுபிரிக்க எழுத்தாளர்களும், பத்திரிகையாளரும் இன்று தென்னுபிரிக்காவுக்கு வெளியேதான் உள்ளனர் இதனுல், சிறந்த இலக்கியம் எதுவும் உருவாக முடியாததோடு, இரு இனங்களினதும் கலாச்சாரங்கள் ஒன்றுக்கொன்று இயைபுடன் கலந்து, தென்னுபிரிக்காவுக்கென்று ஒரு சேசிய கலாச்சாரமும் உருவாக முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது.

தென்னுபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையை அகற்ற நயமாகவும், பயமாக பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. ஐ. நா.வின் கல்வி கலை சலாச்சார விஞ்ஞான நிறுவனம் கூட, இது விடயமாகக் கூடிய கவனம் எடுத்தது. காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு இன ஒதுக்கல் கொள்கையைக் கண்டித்தபோது, காமன்வெல்த் அமைப்பிலிருந்தத தென்னுபிரிக்கா 1961ம் ஆண்டு ஜனவரியில் விலகியது. ஐ. நா.வினதும், பல உலக நாடுகளினதும் முயற்சி தென்னுபிரிக்க விஷயத்தில் பலனளித்திருப்பதாகத் தெரியவில்லை.

# இன்று
# வண்ணை பெருமாள் கோயிலில் ஸ்ரீராம பட்டாபிஷேக விழா

யாழ்ப்பாணம், சனி

வண்ணை ஸ்ரீவெங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய ஸ்ரீராம பட்டாபிஷேக விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு தேவஸ்தான நாதஸ்வர வித்துவான்களின் மங்கள இசையுடன் ஆரம்பமாகும்.

கம்பன் கவிதைகளை உள்ளடக்கிய கருத்தரங்கம், கவியரங்கம், இசையரங்கம் ஆதியன முயக்கிய அம்சங்களாக இவ்விழாவில் இடம் பெறவுள்ளன.

மாலை ஆரம்பமாகும் இவ் விழாவின் முன் நிகழ்ச்சியாக பண்ணிசைக் கச்சேரி நடைபெறும். கருத்தரங்கத்தில் 'கம்பன் காட்டிய அருள் நெறி' என்னும் பொருளில் செந்தமிழ்மணி பொன். கிருஷ்ணபிள்ளை உரையாற்றுவார். அவரைத் தொடர்ந்து வித்துவான் க. கார்த்திகேசு 'கம்பன்கண்ட அவதார புருடர்' என்னும் பொருளில் பேசுவார். பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 'அயோத்தியில் அறம் வாழ்ந்தது' என்னும் பொருளில உரையாற்றுவார். 'இராம இராஜ்யம் அமைப்போம்' என்னும் பொருளில் கவிஞர் இ. நாகராஜனின் தலைமையில் கவிஞாகள் அரியாலையூர் வே. ஐயாத்துரை, கல்வயல் வே. குமாரசாமி, வளலாய் செ. சிவசம்பு, செ. விவேகானந்தன் ஆகியோர் பங்குபற்றுவர்'

நாச்சிமார் கோவிலடி நாதஸ்வர வித்துவான் கணேசன் கோஷ்டியினரின் விசேட நாதஸ்வரக் கச்சேரிக்குப்பின்னர் வில்லிசை நிகழ்ச்சியும் நடைபெறும்.

8-கலம் பார்க்க

## கந்தப்புராணசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், சனி

மறைந்த இந்துபோட் திரு. சு. இராசரத்தினத்தின் நாமதத்தை மக்கள் மனதில் நிலைநாட்டி அவர் பணியில் பலரும் ஈடுபட அன்னுர் பெயரைத் தக்கவாறு நிலைநாட்டும் பணியில் நாவலர் பெருமான் கந்தபுராண சபை ஈடுபடுவதெனத் தீர்மானித்துள்ளது.

நாவலர் மண்டபத்தில் சைவப்புலவர் அ. கி. ஏரம்பமூர்த்தி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு முடிவு செய்யப்பட்டது, 'நாவலருக்குப்பின் சைவக் காவலர் இராசரத்தினம்' என்பதை என்றும் ஞாபகம் செய்ய[illegible]கையில் பிரசாரஞ் செய்வதெனவும், அவசியமானுல் சிலை எடுக்க[illegible]வோர்க்கும் பிற[illegible]ண்டுகளில் ஈடுபடுவோர்க்கும் உதவுவதெனவும் தீர்மானிக்[illegible]

## சிறப்புப் பற்றி ம. பொ. சி.

சென்னை, மார்ச். 20

எந்தக்காலத்தில் எது தோன்றவேண்டுமோ அது தமிழகத்தில் தோன்றும் அதன்படியே அண்ணுவுக்குப் பின் கலைஞர் கருணுநிதி தோன்றியுள்ளார் இவ்வாறு ம. பொ. சிவஞானம் அண்மையில் கூறினுர்.

மாததரம் பஞ்சாயத்து யூனியன் கட்டிடத்தில் திரு கருணுநிதியின் படத்தைத் திறந்துவைத்து மா. பொ. சி பேசினுர் அவர் கூறியதாவது:-

"எந்தக்காலத்திற்கும் எது தேவையோ அது தமிழகத்தில் தோன்றும் மகாகவிகள் தோன்றவேண்டிய காலத்தில் மகாகவிகள் தோன்றினர் போராட்டவீரர்கள தோன்றவேண்டியகாலத்தில் கட்டப்பொம்மன் போன்ற போராட்டவீரர்கள தோன்றினர் ஏகாதிபத்தியக்கப்பல் விட்டசிதம்பரனுர் தோன்றினுர்.

அதுபோல் அண்ணுமறைந்த பிறகு இனி என்ன?- என்று கேட்டனர்சிலர்! விஞக்குறி எழுப்பினர் சிலர்: ஆச்சரியக்குறி எழுப்பினர் சிலர் முற்றுப்புள்ளியே வைக்கவேண்டும் எனநினைத்தனர்சிலர் ஆனுல் எக்காரியத்தில் எது தோன்றவேண்டுமோ அந்தக்காலத்தில் அது தோன்றும் என்ற நியதிக்கேற்ப அண்ணுவிற்குப்பின் கலைஞர் தோன்றினுர் அவர்.

மாற்றுக்கட்சியினரும் புக

# ஜயாரன் எழுதுவது..

பளை, பச்சிலைப்பள்ளியிலே ராஜாங்க அமைச்சர் ஜே. ஆர். ஜயவர்த்தன தேசிய இளைஞர் சேவையை ஆரம்பித்துவைக்கையில், முதலில் தமிழிலே பேசியுள்ளார். இது மகிழ்ச்சியுடன் வரவேற்கத் தக்கதாகும் அவர் இங்கு தமிழில் பேசியதை, தெற்கிலே சில வகுப்புவாதிகள் எடுத்துச் சொல்லி, அவருக்கு மாருகத் தேர்தல் பிரசாரம் செய்யக்கூடும் இதை உணர்ந்திருந்தும் ஜே. ஆர். துணிச்சலுடன் தமிழில் பேசியது பாராட்டத்தக்கது.

"தமிழில் என்னுல் நன்ருகப் பேசமுடியாது. என் தாயாருக்கு நன்ருகத் தமிழ் பேசத் தெரியும். அதனுல் நானும் கூடிய விரைவில் உங்கள் முன் தமிழில் பேச முயற்சிப்பேன்நீங்கள்இன்று என்னை சிங்களத்தில் கீதம் பாடி வரவேற்றதுபோலப் விரைவில் நானும் உங்கள் முன்னிலையில் தமிழில் பேசுவேன்" என்று ஜே. ஆர். கூறியுள்ளார்.

பார்லிமெண்ட் சபையிலே மகாவலித் திட்டம் பற்றி, சாவகச்சேரிப் பிரதிநிதி வி. என் நவரத்தினமவர்கள் தமிழில் பேசுகையிலும் ஜே. ஆர், குறுக்கிட்டு 'உங்களுக்குத் தண்ணீர் வேண்டாமா?" என்றும், தொண்டமனுக்கு இந்தத் தண்ணீர் கொடுக்கமுடியும்" என்றும் தமிழில் கூறியுள்ளதை 'ஹன்ஸார்ட்'டில் பார்த்தேன். அமைச்சர் போட்டியிடும் கொழும்பு தெற்குத் தொகுதியில் பல தமிழர்கள் உள்ளதாயும், தேர்தல் நெருங்கி வருவதால் அவர் தமிழில் பேச முற்பட்டதாகச் சிலர் கூறக்கூடும்.

காரணம் எதுவாயினும் சரி, தமிழரின் அபிமானத்தையும், ஒத்துழைப்பையும் பெருமல் அவர்களை ஒதுக்கிவைத்துவிட்டு இந்நாட்டில் அமைதியாக ஆட்சி நடத்த முடியாதென்பதை பொறுப்புள்ள அரசியல் தலைவர்கள் உணர்ந்து வருவதற்கான பல நல்ல அறிகுறிகளைப் பார்க்கின்ருேம்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும்கூட வடக்கிலே போட்டியிட முன்வந்துள்ளது வரவேற்கத்தக்கது. அக்கட்சித் தலைவரான ஸ்ரீமாவும், ஜே ஆரை.ப் பின்பற்றி இங்கு வந்துதமிழில் சிலவார்த்தைகளையாவது பேசுவாராயின் அதில் வியப்பில்லை. தாங்கள் மொழி விஷயமாகச் செய்துவிட்ட பழைய பாவங்களை அவ்விரு கட்சியினரும் உணர்ந்து, தமிழ் பேசும் மக்களின் மனப்புண்ணை ஆற்ற இப்போதாவதுமுன்வருவதாயின் அதை நாம் வரவேற்கவேண்டியதுதானே!

0 0 0

தில்லானு மோகனும்பாள் படத்தைப் பார்த்தேன். அதைப் பார்த்ததும் நமது நாதசுர வித்வான்கள் மீதும், பரதநாட்டியம் உள்ளிட்டுப் பல கலைஞர்கள் மீதும் எனக்குப் புது மதிப்பு ஏற்படுவதாக உள்ளது. என் உள்ளத்தால் அக்கலைஞர்களைக் கைகூப்பி வணங்குகின்றேன் அப்படத்தைப் பார்த்த மற்றவர்களுக்கும் இவ்வித உணர்ச்சி ஏற்பட்டிருக்கவேண்டும்.

நம்மிடையே எவ்வளவோ கலைஞர்கள், அன்ருட வாழ்க்கையை நடத்தமுடியாமல், பெரிய குடும்பப் பாரத்துடன் தவிப்பது பகிரங்க ரகசியம் கலைஞர்கள் கவலையில்லாமல் வாழமுடிந்தால்தான் அவர்களது கலைத் திறமையும் ஓங்கமுடியும். இவ்விஷயமாக நமது அரசாங்கம் எப்போதுதான் கண் திறந்து தன் கடமையைச் செய்யப்போகிறதோ?

0 0 0

முற்காலத்தில் நமது மன்னர்கள், கலைஞர்களுக்குச் சன்மானங்களையும், மான்யங்களையும் தாராளமாக அளித்து, கலைகளை வளர்த்தனர். இனி மீண்டும் இங்கு மன்னர்களின் ஆட்சி ஏற்பட்டால்தான் நம் கலைஞர்களுக்கு நல் வாழ்வு கிடைக்குமா?

பொற்ருெடி யாளுமை பங்கன் மேவும் புனவாயிலைக் கூற்றவர் தார்தொழுதேத்த நின்ற கடற்காழியான், நற்றமிழ் ஞானசம்பந்தன் சொன்ன தமிழ் நன்மையால், அற்றமில் பாடல் பத்தேத்தவல்லார் அருள் சேர்வரே.

— திருஞானசம்பந்தர்

# அற்புதம் நிகழ்

# சிங்களக்கட்சிகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நாட்டில் வசிக்கும் பொதுமக்களின் இரு முக்கிய மொழிகளும், ஆங்கிலமும் தெரிந்திருக்கவேண்டுமென்பதை யாரும் மறுப்பதற்கில்லை. அவர்களுக்கு மூன்று மொழிகளும் தெரிந்திருக்க வேண்டுமென்று ஐக்கிய தேசியக்கட்சி, சென்ற பொதுத்தேர்தல் விஞ்ஞாபனத்தில் சரியாகக் குறிப்பிட்டிருந்தது. அதை அமுல் செய்திருந்தால், மொழி விஷயமான அநீதியும் சிக்கலும் பெரிதும் குறைந்திருப்பதுடன், அரசாங்க நிர்வாகமும் சீராகவும், சிக்கன

கோரிக்கைக்கு செவிசாய்த்து இப் பரீட்சையை இயன்றவரை இலகுவாக்குவதுடன், சிங்களம் கற்க அதிக அவகாசம் அளிக்கவேண்டும். இம்முறை பரீட்சை விடைத் தாள்கள் இதற்குள் தயாராகி இருக்கும். என்றாலும் விடைத்தாள்களை மதிப்பதில் தாராள மனம் காட்டலாம். அரசியல் சட்டமும் நீதியும் இவ் விஷயத்தில் தமிழ் பேசும் மக்களின்பால் இருப்பதால், அரசாங்கமும் சிறப்பாக பிரதமரும் இக் கோரிக்கைக்கு செவிசாய்க்காமல் இருக்கமுடியாது.

## 'ஈழகேசரி' பொன்னையா ஞாபகார்த்த பேச்சு போட்டி

யாழ்ப்பாணம், சனி

ஈழகேசரி பொன்னையா ஞாபகார்த்த பேச்சுப் போட்டி அடுத்தமாதம் 12ம் திகதி நடைபெற வுள்ளது. குரும்பசிட்டி சன்மார்க்க சபை ஆதரவில் கடந்த ஏழு வருட காலமாக சிறப்பாக நடந்து வந்த இப் பேச்சுப் போட்டி இவ் வருடம் சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றது. 'ஈழகேசரி' பொன்னையா ஞாபகார்த்தவிழாவில் பேச்சுப் போட்டி நடைபெறும். கீழ்பிரிவு, மேற்பிரிவு என இருபிரிவுகளாக நடாத்தப்படும் இப்பேச்சுப் போட்டியில் ஆண்களும் பெண்களும் பங்கு பற்றலாம்.

அடுத்தமாதம் 4ம் திகதிக்குமுன் போட்டியில் பங்கு பற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பிவிட வேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

## "நாட்டின் அபிவிருத்திக்கு இளைஞர் உழைக்கவேண்டும்"

யாழ்ப்பாணம், வெள்ளி

'எமது நாட்டு இளைஞர்கள் தங்களுடைய உணர்ச்சியை, ஊக்கத்தை நாட்டின் அபிவிருத்திக்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். மேலைத் தேசத்து இளைஞர்கள் தமது நாட்டுக்கு ஆபத்து வரும் போது கொதித்து எழுந்து காப்பாற்றுவார்கள். இந்த நாட்டிலும் புகழ் பெற்ற தேசிய வீரர்களுள் சேர் பொன் இராமநாதன், அருணாசலம் போன்றோர் முன்னணியில் திகழ்கிறார்கள். அவர்களை நினைத்து வருங்கால இளைஞர்கள் ஆக்கப் பணிக்கு கையோடு கை கோர்த்து உழைக்க வேண்டும்'.

இவ்வாறு குருநகல் முதலாவது தேசிய இளைஞர் தலைவர் திருவாளர் தஸநாயகா கேட்டுக்கொண்டார்.

மேலும் தொடர்ந்து அவர் கூறியதாவது: 'பரஸ்பரமாக சகோதர மனப்பான்மையுடன் ஒன்றுபட்டு கட்டுப்பாட்டுடன் இந்த தேசிய வேலைகளை செய்யவேண்டும். மகாவலித் திட்டம் போன்ற மாபெரும் நீர்பாசன வேலைகளுக்கு இந்த நாட்டுதேசிய இளைஞர் மூலம் திறமைப்படி இளைஞர்களை பற்பல தொழில்நுட்ப வேலைக்கு வாய்ப்பும் இந்த தேசிய பணிமூலம் கிடைக்கும். நல்ல இளைஞர் கையில் ஓர் நாடு தங்கியுள்ளது. இந்த நாட்டிலும் அவ்வாறு வளர ஒற்றுமையாக பணிபுரிவீர்.

(கு.வி.ம)

## ரதோற்சவம்

யாழ்ப்பாணம், சனி

சுன்னாகம் ஹரிஹரபுத்திர ஐயனார் கோவில் ரத உற்சவம் இன்று நடைபெறும்.

## ரூபா 15,000 ஒதுக்கீடு

கைதடி, வெள்ளி

கைதடி முத்துக்குமார வித்தியாசாலைக்கு 15,000 ரூபா செலவில் புதிய கட்டிடம் கட்டப்படவிருக்கிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# அற்புதம் நிகழ்த்திய நாகதம்பிரான்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் கோவில் வருடாந்த பொங்கல்விழா நாளை நடைபெறுவதையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகின்றது.

சந்திரமண்டலயுகமான இக்காலத்திலேயும் நூற்றுக் கணக்கான மாட்டுவண்டிகளில் பண்டங்கள் ஏற்றி வாத்திய சகிதம் ஊர்வலமாக 35 மைல் ஒருதலத்திற்கு யாத்திரீகர்கள் சென்று ஆண்டுற்சவம் நடத்துவது என்றால் அதில் ஒரு விசேடம் இருக்குமல்லவா?

ஆம், புளியம்பொக்கணை நாகதம்பிரான் சிவன் கோயில் ஆண்டுப்பொங்கல் நாளை நடைபெறுகிறது. அதனை ஒட்டி இத்தலத்தின் படமும் வரலாறும் பிரசுரமாகின்றது.

புளியம்பொக்கணை என்னும் வளம் மிக்க கிராமம் பரந்தனில் இருந்து பத்தாவது மைலுக்கு அப்பால் உள்ளது. இங்கு ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் நீதி நாயகமுதலியார் என்னும் வன்னியகுலதிலகர் இருந்தார். மகப்பேறில்லை. உத்தமி கமலம்மையாருடன் சிவ வழிபாட்டை மேற்கொண்டதன் விளைவாக இரு மைந்தரைப் பெற்றனர். அவர்கள் மீண்டும் பங்குனி மாசம் உத்தர நட்சத்திரத்தில் ஒரு பெண் மகவைப் பெற்றனர். அப் பெண் மகவுடன் கூடவே ஒருபாம்பும் பிறந்தது.

காலக்கிரமத்தில் அப்பாம்பும் இதரபாம்புகளுடன்கூடி அவ்வீடு பாம்பு மயமாகவே காட்சியளித்தது. ஆயினும் இப்பாம்புகள் ஒருவருக்கும் தீங்கிழைக்கவில்லை.

நீதி நாயகமுதலியார் முதிர்ச்சியடைந்த படியால் தனது ஆஸ்திகளை மூன்று புத்திரர்களுக்கும் பகிர்ந்து சாதனமமைக்க அன்றொரு நாள் உயிலாளரை அழைத்தார்: இது கண்ட நாகபாம்பு சீறிச்சினந்து எழுவதந்தவர் மேசையிலும் தாவவே யாவரும் திகிலடைந்தனர்.

நீதி நாயக முதலியார் புத்திசாலி "சரியப்பா? குளப்பமேன்? உனக்கும் ஒரு பாகம் அது உன் சகோதரியின் பார்வையில் இருக்கும்" என்றார் பாம்பு சாந்தமடைந்தது யாவரும் அதிசயித்தனர். அப்படியே உயில் எழுதப்பட்டது. பாம்பின் காணிகள் இன்று கோயிலாதனம்.

பாம்புகள் பெருகி முற்றம் கூட்டுகையில் குப்பையைகுழப்புதல் போன்ற தொல்லைகளைச் செய்வதுண்டு பொறுமையிழந்த கமலம்மையார் ஒருநாள் 'மூதேவிகள்! தொலையுங்கள்!' என்று கூட்டு மாற்றால் தட்டினாள். அதன் விளைவு சர்வ சர்ப்பங்களும் வனங்களூடாகச் சென்று மறைந்தன.

இஃதறிந்த முதலியார் துன்புற்றார். சுண்டுஞ்சார் வேதனையுற்றார் ஈற்றில் கனவில் கண்டபிரகாரம் புதூர் நாகதம்பிரான் கோயில் பகுதியில் தேடி வரிசைவாத்தியத்துடன் ஒரு சில சர்ப்பங்களைக் கூட்டிவர முடிந்தது. பின்னர் முதலியார் இறைவன் திருவுள்ளப்படி அமைக்கப்பட்டதே இந்த புளியம் பொக்கணை நாகேசுவரர் சிவன் கோயில் மீசாலையில் இருந்து வண்டிகளில் பண்டங்கள் கொண்டு வரப்படும்.

ஒரு தடவை ஊர்வலம் வரும்போது எதிர் வழியே குதிரையில் வந்த ஒல்லாந்த தளபதி பண்டவண்டிகளின் தொகை பூசை வழிபாடு தெரு வழியாக நடப்பதைக்கண்டு பூசகருடன் மோதினான்.

ஈற்றில் வண்டியில் இருந்து பாம்பு துணைக்குவந்தது "உனது கடவுளாகிய பாம்பைக் காட்டுவாயா" என்று தளபதி கேட்க ஒரு வளர்ந்து பானையை எடுத்து மூடி தூபம் தீபங்காட்ட பாம்பு பானையைவிட்டு சீறிவந்து வெளியே வந்து ஆடியது தளபதியும் அடியவனுகி காணிக்கையும் தான் கண்ட.

ஐந்து தலை நாகம் போன்ற சொரூபமும் செய்துகொடுத்து பொங்கலிலும் கலந்து கொண்டான்.

நீதிநாயக முதலியாரின் சந்ததியினரான திரு. நா. ஐங்கரப்பிள்ளை இக்காலம் அருச்சராகி செவ்வனே கோயிலை நிருவகிக்கின்றார்.

புதுக்கட்டிடம் புதுப்பொலிவுடன் திருவருள் பாலிக்கின்றது நாகேசுவரர் கோயில் தலமூர்த்தி நாகேசுவரர் அம்மைபெயர் நாகேசுவரி.

ஆர். ரி. சுப்பிரமணியம்

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

ஞாபகம் செய்யும் வகையில் பிரசாரஞ் செய்வதெனவும், அவசியமானால் சிலை எடுக்க முன்வருவோர்க்கும் பிற தொண்டுகளில் ஈடுபடுவோர்க்கும் உதவுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. சைவப்புலவர் ஆ. கி ஏரம்பமூர்த்தி தம் தலைமையுரையில் சாதாரண ஏழை மக்கள் செல்வச் செழிப்புடன் வாழவைத்துத் தாம் அதனைக் கண்டு களிப்பதே தொண்டாகக் கொண்ட தியாகச் செம்மல் நாம் கண்டனர்சிலர் ஆனால் எக்காரியத்தில் எது தோன்றவேண்டுமோ அந்தக்காலத்தில் அது தோன்றும் என்ற நியதிக்கேற்ப அண்ணாவிற்குப்பின் கலைஞர் தோன்றினார் அவர். மாற்றுக்கட்சியினரும் புகழும்படி ஆட்சிநடத்துகிறார்.

நூற்கண்ட பெருந்தகை இராசரத்தினம் என்றார் வித்துவான் க. கணபதிப் பிள்ளை, திரு. இ. திருஞானசம்பந்தன், திரு கா இரகுநாதன் ஆகியோர் பேசினர்.

## நாளை கிறிஸ்தவஉலகம் கொண்டாடும் குருத்தோலைத் திருநாள்

— சாமுகவேல் பெனடிக்ற் —

அக்காலத்தில் யேசுபிரான் ஜெருசலேம் நகருக்கு அண்மையில் வந்து சேர்ந்தார், அது பஸ்காப்பண்டிகைக்கு ஆயத்தம் செய்யும் காலமாயிருந்தது. அவர் இரண்டு சீடர்களைப் பட்டினத்துக்குள் அனுப்பினார். அவர்கள் அங்குசென்றுதமக் கெதிர்ப்பட்ட இடத்தில் ஒரு கழுதையையும் குட்டியையும் கண்டு அவைகளின்கயிற்றை அவிழ்த்தனர் அங்கிருந்தோர் ஆட்சேபித்த போது இது எங்களாண்டவருக்குத் தேவையாயிருக்கிறதென்று கூற அவர்களும் சம்மதித்தனர்.

சீடர்கள் கழுதையும் குட்டியையும் கொண்டுவந்து அவைகள்மேல் தங்கள்வஸ்திரங்களை விரித்து அவரை உட்காரச் செய்தார்கள். அப்போது திரளான சனங்கள். வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள். வேறுசிலர் மரக்கிளைகளை ஒடித்து பாதையிலே பரவினார்கள். அவருக்கு முன்னும் பின்னுமாகத் திரளான பேர் நடந்து சென்று 'தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா. சர்வேசுரனுடைய நாமத்தினால் வருகிறவர் ஆசீர்வதிக்கப்பட்டவர். உன்னதங்களில் ஓசன்னா" எனப்பேரொலி செய்தனர். இதுபண்டைய வரலாறு

**இன்றைய சடங்குகள்**

கிறிஸ்துவின் இந்த மகிமைப்பிரதாபமுள்ள ஜெருசலேம் வருகையைக் குறிக்குமுகமாக கிறிஸ்துவ தேவாலயங்களில் குருத்துக்களை ஆசீர்வதிக்கும் சடங்கு நடைபெறுகின்றது, குருத்துக்கள் தேசத்துக்கு தேசம் மாறுபடுகின்றன. ஈசங்குருத்துக்கள் ஒலிவங் குருத்துக்கள், தென்னங்குருத்துக்களபாம் எனப்படும் செடியின் குருத்துக்கள் இப்படிப்பலவகையான குருத்தோலைகள உபயோகிக்கப் படுகின்றன.

குருவானவர் குருத்துக்களை ஆசீர்வதித்தபின் இவைகள் பக்தர்களுக்கு விநியோகிக் கப்படுகின்றன. இக் குருத்துக்களை அனைவரும் கையிலேந்திக்கொண்டு பக்திப்பாடல்களைப் பாடிக் கொண்டு ஊர்வலமாக வருகின்றார்கள். இத்தருணத்தில் கதவுகள் சாத்தியிருக்க யாவரும் வெளியேநிற்பர். குரு தம்மிடமுள்ள சிலுவையினால் கதவில் தட்ட அது திறக்கப்படும். ஆதிப் பெற்றோரின் அக்கிரமங்களால் பரலோகவாயில் அடைக்கப்பட்டது. யேசுபிரானின் சிலுவை மரத்தால் அது மீண்டும் திறக்கப்பட்டது என்பது இதன் கருத்து. இதன்பின் யாவரும் ஆலயத்துள் செல்ல அங்கு திருப்பாடுகளின் அம்சங்களை அறிவுறுத்தும் விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

**திருப்பலியின் சிறப்பு அம்சங்கள்**

பிரவேச வாக்கியத்தில் கிறிஸ்துபிரான் இறைவனைப் பிரார்த்தித்த முறையும் நாம் தேவனை ஆராதிக்கும் முறையும் எடுத்துக்காட்டப்படுகிறது. நிருபத்தில் நமதாண்டவர் தமது திருப்பாடுகளின்போது காட்டிய பணிவும் பொறுமையும் விளக்கப்படுகிறது. தீயோர் இவ்வுலகில் மகிமைப்பிரதாபத்தோடுசீவிக்கக்காணப்படினும் அது நிலையானதல்ல என்பதை ஆரோகணகீதம் விளக்குகிறது.

இயேசுநாதரின் திருப்பாடுகள் அனைத்தையும்சு விசேஷ வாசிப்பு உள்ளடக்குகிறது.

**குருத்துக்களின் கருத்து**

கிறிஸ்துவே எமது தெய்வீக அரசர். அவர் மரணத்தின்மேல் வெற்றி கொண்டார். இவ்வுலகில் துன்பம் அனுபவிப்போரெல்லாம் நித்தியத்தில் நற்சம்பானை பெறுவர் என்ற கருத்துக்களை இக்குருத்துகள் நினைவுபடுத்துகின்றன.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும்கூட வடக்கிலே போட்டியிட முன்வந்துள்ளது வர

அருள் சேர்வரே.

— திருஞானசம்பந்தர்

## சிங்களக்கட்சிகளின் உதவி கிடைக்கிறதாம்

வேலணை, சனி

தேர்தல் வருவதால்தமிழர் மத்தியில்பல கட்சிகள ஆரம்பிக்கத் தொடங்கிவிட்டன. தமிழருக்கிடையே திடீரெனத் தோன்றும். இந்தக் கட்சிகளின் உள்நோக்கம் தமிழரசுக்கட்சியை உடைப்பதேயாகும். இக்கட்சியைப் பலவீனப்படுத்த விரும்பும் சிங்களக்கட்சிகளின் சூழ்ச்சிகளுக்கு தமிழர் மத்தியில் ஆரம்பிக்கும் கட்சிகள் பக்கபலமாக இருக்கின்றன.''

இவ்வாறு ஊர்காவற்றுறை தாம்பாட்டி காந்திஜி சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்றதமிழரசுக்கட்சி வாலிப முன்னணிக்கிளை அமைப்புக் கூட்டத்தில் பேசிய பண்டிதர் கா'பொ இரத்தினம் எம். பி. கூறினார்.

திரு சின்னத்துரை தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இக் காளான் கட்சிகள பலவற்றிற்குசிங்களக்கட்சிகளின்பண உதவியும் கிடைப்பதாக திரு. இரத்தினம் தெரிவித்தார்

திருவாளர்கள் சி சுந்தரலிங்கம், நா தாமோதரம் பிள்ளை, என் கே தர்மலிங்கம் ஆகியோரும் பேசினர்.

## மன்னர் செய்யாததைதேசிய அரசாங்கம் செய்துள்ளது

— ஜே. ஆர்.

அம்பலாங்கொடை, வெள்ளி

சிங்கள மன்னர்கள் கூடச் செய்யாத சேவையை தேசிய அரசாங்கம் செய்துள்ளது. தேசிய அரசாங் மேற்கொண்டுள்ள மகாவலி கங்கை திசைதிருப்பும் திட்டம் ஆசியாவிலே எந்த ஒரு நாடும் மேற்கொள்ளாத பெரிய திட்டமாகும்.

பலப்பிட்டியாவில் நடைபெற்ற ஐக்கியதேசிய பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய ராஜாங்க அமைச்சர் திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன மேலும் தொடர்ந்து பேசுகையில் உலகவங்கியிடம் இலங்கையை ஈடுவைத்துவிட்டார்கள் என எதிர் கட்சியினர் வீண் பேச்சு பேசுகின்றனர். அபிவிருத்தியடையாத நாடுகள் தங்கள் நாடுகளின் அபிவிருத்தியை முன்னிட்டு உலகவங்கியிடம் கடன் பெற்றுள்ளன சோஷலிஸ்ட் நாடான யூகோஸ்லாவியா கூட உலகவங்கியிடம் 17 தடவைகள் கடன்பெற்றுள்ளது. பண்டாரநாயக்கா ஆட்சிக்காலத்தில் மின்சக்தி நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு உலகவங்கியிடமிருந்து திரு மைத்திரிபால சேனநாயகா கடன் பெற்றார். உண்மையில் எதிர்க்கட்சியின்பயம் என்னவெனில் உலகவங்கியைப் பற்றியதல்ல. மகாவலித் திட்டத்தால் தேசிய அரசாங்கத்துக்கு புகழ் ஏற்பட்டுவிடும். அத்துடன் நாட்டிலும் தலைதூக்கி நிற்கும் பல பிரச்னைகள் மறைந்து நாம் சில சேவைகளில் சுய தேவையைப் பூர்த்திசெய்து விடும் என்பதேயாகும்.

இக் கூட்டத்தில் உள்நாட்டமைச்சர் டாக்டர் தஹநாயக்கா, காணி நீர்ப்பாசன அமைச்சர் திரு. சி. பி. டி. சில்வா ஹினிடும் ஆட்சிமன்ற அங்கத்தவர் திரு. எம். எஸ். அமரசிறி உட்படப் பலர் உரையாற்றினர்.

— —

(4-ம் கலத் தொடர்ச்சி)

இலங்கை இந்திய புகழ் லயஞான குபேர பூபதி அளவெட்டி வி. தெட்சணாமூர்த்தி, விவகார வித்துவமணி இணுவில் என் ஆர் சின்னராசா ஆகியோரின் தவில் கச்சேரியும் நடைபெறும்

## கலைஞர்களுக்கு அழைப்பு

ஞாயிற்றுக்கிழமை (22-3-70 காலை 10 மணிக்கு மலேயா கபே மாடியில் இலங்கையில் தமிழ்ப்படம் தயாரிப்பது சம்பந்தமாக மஞ்சள் குங்குமம் தயாரிபாளரும் நடிகருமான ஸ்ரீ சங்கர் கலைஞர்களுடன்கலந்தாலோசிக்க விரும்புகிறார். கலைஞர்கள் கலாபிமானிகள் திரண்டுவருக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org